★ விலை ரூபா 1·25

# ஈழநாடு

THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

— வெள்ளி விழா ஆண்டு —

மலர் 25 தை 3 ரபி. ஆகி 13 இதழ் 335
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 17-1-84

# யாழ். பல்கலைக்கழகம் மூடப்பட்டது!

## பரீட்சைகள் ஒத்திவைப்பு

(ஏ. வி. மாணிக்கம்)

யாழ். பல்கலைக்கழகம் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளதாக யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் அறிவித்துள்ளார்.

இதுசம்பந்தமான அறிவித்தல்கள் நேற்றுநண்பகல் யாழ். பல்கலைக்கழகத்தின் சகலபீடங்களின் அறிவித்தல் பலகைகளிலும் வைக்கப்பட்டுள்ளன.

"16-1-84 தொடக்கம் மறு அறிவித்தல்வரை யாழ். பல்கலைக்கழகம் மூடப்பட்டிருக்கும். நடக்கவிருந்த சகல பரீட்சைகளும் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளன- உபவேந்தர்" என்று அவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (மா-கு)

## சர்வகட்சி மாநாடு

(கொழும்பு)

மூன்றுநாள் இடைவெளிக்குப்பின்னர் சர்வகட்சி மாநாடு இன்று மீண்டும் ஆரம்பமாகிறது.

இன்றைய கூட்டத்தில்

(8-ம் பக்கம் பார்க்க)

# உண்ணாவிரதம் இருந்த 9 மாணவர்களும்

# மின்னல் வேகத்தில் கடத்தல்!

## துப்பாக்கி நபர்கள் நடத்திய திகில் நாடகம்!!

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் சாகும்வரை உண்ணாவிரதமிருந்த ஐந்து மாணவர்களும் நான்கு மாணவிகளும் நேற்றிரவு இனந்தெரியாத நபர்களினால் கடத்தப்பட்டனர்!**

**இப்பரபரப்பூட்டும் சம்பவம் நேற்றிரவு சுமார் எட்டேகால் மணியளவில் நடந்தது.**

**ஒரு 'ஹயஸ்' வானிலும் ஒரு 'வொக்ஸ் வாகன்' காரிலும் வந்தவர்களே மாணவ, மாணவிகளைக் கடத்தினர்!**

இடப்பெயர்ந்த பல்கலைக்கழக 9 தமிழ் மாணவர்களின் உண்ணாவிரதம், நேற்று எட்டாவது நாளாக தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது. இரவு சுமார் எட்டு மணி பத்து நிமிடமளவில் ஒரு 'வொக்ஸ்வாகன்' கார் பல்கலைக்கழக முன்வாசலால் வந்தது. அதேநேரத்தில் ஒரு ஹயஸ்வான்' பல்கலைக்கழக பின்வாசலால்வந்து அங்கு நின்றது

காரில் வந்த ஆறு பேர் மின்னல் வேகத்தில் செயல்பட்டனர் என்று அங்கு நின்ற மாணவர்கள் பின்னர் தெரிவித்தனர்.

காரிலிருந்து இறங்கிய இவர்கள் பலரக துப்பாக்கிகளையும் கொண்டிருந்தனர் என்றும், ஆனாலும் அவர்கள் துப்பாக்கிப் பிரயோகம்செய்யவில்லை என்றும், துப்பாக்கிகளை கையில் ஏந்தியபடியே மாணவர்கள் மத்தியில் அவர்கள் நுழைந்தனர் என்றும் உண்ணாவிரதமிருந்த மாணவர்களை நெருங்கி அவர்களைத் தூக்கிச்சென்று அங்கு ஏற்கனவே நின்ற 'ஹயஸ்' வானில் வைத்தனர் என்றும் சம்பவத்தை நேரில் பார்த்த சில மாணவர்கள் தெரிவித்தனர்.

உண்ணாவிரதமிருந்த ஒன்பது மாணவ, மாணவிகளுடன் மூன்று தாதிமாரையும் அவர்கள் அழைத்துச்சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த மூன்று தாதிமார்களும், திருநெல்வேலியிலுள்ள ஒரு தனியார் மருத்துவ மனையைச் சேர்ந்தவர்களென்றும், யாழ். செஞ்சிலுவைச்சங்கத்தின்கோரிக்கை மீது இவர்கள் நேற்று உண்ணாவிரதமிருந்தவர்களின் நலனைக்கவனிக்கச் சென்றிருந்தனர் என்றும்தெரி

(8-பக்கம் பார்க்க)

## 3 ஜீப்வண்டிகள் சேதம்

## கல்விக் கந்தோரில் குண்டுவெடித்தது!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் அரச திணைக்களங்களுக்குச் சொந்தமான 3ஜீப் வண்டிகளுக்கு குண்டு வைத்தும் தீயிட்டும் சேதப்படுத்தப் பட்டுள்ளன. இதில் இரு ஜீப் வண்டிகள் முற்றாக சேதமடைந்தன.

யாழ். செயலகத்தில் கமத்தொழில் இலாகாவுக்குச் சொந்தமான இரு ஜீப்வண்டிகளுக்கு குண்டு வைக்கப்பட்டதில் ஒரு ஜீப்வண்டி சேதமடைந்துள்ளது. நேற்று முன்தினம் இரவு 2 மணிக்கு இச்சம்பவம் நடைபெற்றதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

யாழ். தொழில் நுட்பக்கல்லூரிக்கு முன்னால் உள்ள கட்டிடத்திணைக்களத்தின் ஜீப் வண்டிக்கும் நேற்றுமுன்தினம் இரவு குண்டு வைத்து சேதப்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று பிற்பகல் விவசாயத் திணைக்களத்துக்குச் சொந்தமான ஜீப்வண்டி திருநெல்வேலிச் சந்திக்கண்மையில் வைத்து இனந்தெரியாத சில நபர்களால் பெற்ரோல் ஊற்றி தீயிடப்பட்டதாகவும், ஜீப் வண்டி முற்றாக எரிந்துவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

### குண்டுவெடித்தது

(கல்வியங்காடு)

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தில் சனிக்கிழமை அதிகாலை குண்டு ஒன்று வெடித்தது.

சனிக்கிழமை இரவு திடீரென புகுந்த நான்கு இளைஞர்கள் கடமையிலிருந்த இரு

(8ம் பக்கம் பார்க்க)

# மாணவி நிலைமை மோசம்:

# ஜனாதிபதிக்கு அவசரத் தந்தி

[யாழ்ப்பாணம்]

யாழ் பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டின்படி பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக தமிழ் மாணவர்ஒன்றியத்தின் மூன்று பிரதிநிதிகளை நாளை புதன் கிழமை நண்பகல் 12 மணிக்கு சந்திக்க ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன சம்மதம் தெரிவித்துள்ளார்

யாழ். பிஷப் தியோகுப்பிள்ளை யாழ். பிரஜைகள் குழுத்தலைவர் பேராசிரியர் லூதர் ஜெயசிங்கம் செயலாளர் சட்டத்தரணி ஆர் பாலசுப்பிரமணியம் ஆகியோர் நேற்று முன்தினம் மாலை 8 மணிக்கு மாணவர் தலைவர் திரு. ரி. தயாபரனைச் சந்தித்து மேற்கண்ட தகவலைத்தெரிவித்தனர்.

வட்டுக்கோட்டை முன்னாள் எம் பி. கலாநிதி நீலன் திருச்செல்வம் மூலம் யாழ். பிரஜைகள் குழுச்செயலாளர் சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம் ஜனாதிபதியுடன்தொடர்பு கொண்டு மாணவர் நிலைமை மோசமாகி வருவதாகவும், இதில் ஜனாதிபதி உடன் தலையிடவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்ததுடன்

8-ம் பக்கம் பார்க்க)

# யாழ். நகரில் நடந்த மறியல் போராட்டம்

(யாழ்ப்பாணம்]

யாழ் அரசாங்க செயலகம், மாநகரசபை, வீரசிங்கம் மண்டபம், கல்விக்கந்தோர் யாழ். ஆஸ்பத்திரி ஆகியவற்றின் முன்னால் நேற்று நண்பகல் தொழிற்சங்கங்களும், மாணவர்களும் சேர்ந்து சுலோக அட்டைகளுடன் ஒரு மணி நேரம் ஆர்ப்பாட்ட மறியல் போராட்டம் செய்தார்கள்.

நேற்றுநண்பகல் 12 மணிக்கு பல்கலைக்கழக மாணவிகள் சுலோக அட்டைகளுடன் கச்சேரி பிரதான வாசல்களில் சத்தியாக்கிரகம் செய்தனர். அச்சமயம் பொலிஸ் அதிகாரியொருவர் ஜீப்பில் வந்து பார்வையிட்டு சென்றார்.

இதனால் கச்சேரியை சேர்ந்த ஊழியர்கள் வெளியில் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டது. சுமார் 10 நிமிடம் வரை மாணவிகள் அசையவில்லை. மாணவர் தலைவர்கள் அந்த இடத்திலேயே ஆலோசனை செய்து ஊழியரும் மாணவரும் சேர்ந்து வீதி ஓரத்தில் நின்று மறியல் செய்வதெனத் தீர்மானித்தனர்.

எட்டு நாட்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள், நீங்கள் ஒரு நேரச் சாப்பாட்டை தியாகம் செய்தால் என்ன; என்று மாணவர்கள் ஊழியர்களிடம் கேட்டார்கள் மாணவர்களின் வேண்டுகோளை ஏற்று கச்சேரி ஊழியரும் அவர்களுடன் சேர்ந்து கச்சேரிக்கு முன்வீதியில் இரு கரையிலும் நின்றார்கள்.

கச்சேரி பகுதியில் உள்ள சகல இலாகா ஊழியரும் சுலோக அட்டைகளுடன் ஊர்வலமாக வந்து பங்குபற்றினார்கள். நண்பகல் பலத்த மழை பெய்த போதும் மாணவர்களும், ஊழியரும், தொடர்ந்து வீதிக்கருகில் ஆர்ப்பாட்டம் செய்து கொண்

(8-ம் பக்கம் பார்க்க)

## பொதுமக்கள் பேராதரவு

(கா. யோகநாதன்)

சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் மாணவர்களை பார்வையிட்டபின், மாணவத்தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திய கூட்டணித்தலைவர்கள், மாணவர்கள் கோரிக்கை தொடர்பாக ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தனவுடன் தொலைபேசிமூலம் தொடர்பு கொள்ள எடுத்தமுயற்சி பலனளிக்கவில்லை இதனால் ஜனாதிபதியை நேரில் சந்தித்துபேசுவதாகத் தெரிவித்தனர்.

இடம்பெயர்ந்த தமிழ் பல்கலைக்கழகமாணவர் தலைவர் திரு ரி தயாபரன், கூட்டணித் தலைவர்களுடன் பேச்சுநடத்தியபின், மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கூட்டணித்தலைவர்களான திரு. அ. அமிர்தலிங்கம், திரு. எம். சிவசிதம்பரம், மாவை சேனாதிராசா ஆகியோர் நேற்று முன்தினம் பிற்பகல், சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கும் மாணவரை நேரில்பார்வையிட்டனர் அதன்பின் மாணவர் தலைவர்களுடன் பேச்சு நடத்தினார்கள்.

### தினமும் கூடும் திரளான மக்கள்

தைப்பொங்கல் தினமான ஞாயிறு காலையே மக்கள் அலை அலையாக பல்கலைக்கழகத்தை நோக்கிவர ஆரம்பித்தனர்

(8-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

சுன்னாகம் ஈஸ்வரி இரும்புக் கடையில் கட்டிடத்துக்குத் தேவையான இரும்புசாமான்கள், பெயின்ற் வகைகளுடன் குடும்பத் தலைவியருக்கு தேவையான ஆட்டுகல் அம்மி, திருகை, கோவில் தளவரிசை கல் அனைத்தும் விற்பனைக்குண்டு. வவனியா, சூரியா ஸ்ரோரின் கைதேர்ந்த தொழில்நுட்பக் கலைஞர்களினால் கடைந்து தயாரிக்கப்படுகிறது. 142

வட்டுக்கோட்டை மேற்கு மாவடிச் சந்திக்கு அருகாமையில் அரசாங்க டிஸ்பென்சறிக்கு முன்பாக நல்ல தண்ணீர்க்கிணற்றுடன் ஒன்றரைப் பரப்பு விசாலம் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். சி, இராசநாயகம் பிரசித்த நொத்தாரிஸ் 56, அத்தியடி புதுவீதி, யாழ்ப்பாணம். 153

1979 மொடல் டெலிக்கா வான் எட்டு இருக்கையுடன் விற்பனைக்கு உண்டு. குளிர் சாதனத்துடன் 78000/-, இல்லாமல் 68009/-. 38 Sri இரண்டாயிரம் நம்பருக்குள். தொடர்புகொள்ள வேண்டிய இடம் N. கந்தையா, கலட்டி ஒழுங்கை, கோண்டாவில் மேற்கு. 154

மல்லாகம் நீதிமன்ற வீதியில் சந்தியிலிருந்து ¼ கட்டை தூரத்தில் 4¾ பரப்பு வெறும் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு:- நாகேந்திரம் 46, அம்மன் வீதி, நல்லூர். யாழ்ப்பாணம். 166

யாழ். மானிப்பாய் பிரதான வீதியில் மகளிர் கல்லூரிக்கு அண்மையில் வீடுகட்ட/வியாபாரம்/தொழில் ஸ்தாபனம் அமைக்க உகந்த 2¼ பரப்புக் காணி விற்பனைக்குண்டு த. சபாரத்தினம், கிராம சேவையாளர் கனகசபை வீதி, மானிப்பாய். 167

கூடுதல் பயன் தரக்கூடிய நல்ல இன கறித் தென்னம்பிள்ளைகள் (Hybrid) விற்பனைக்கு உண்டு. மில்க் வைற், யாழ்ப்பாணம். 172

## முதலிலேயே விதிக்கப்பட்ட பூரணதீர்வை அறிவித்தல்

மாவட்ட நீதிமன்றம் பருத்தித்துறை

புலோலி தெற்கு கந்தப்பு கிருஷ்ணபிள்ளையின் மரணசாதன சொத்துக்கள் சம்பந்தமாக

—இறந்தவர்

1188/T

வல்லிபுரம் செல்லையா மகள் சரஸ்வதி தற்போது இராசேந்திரம் பெண் சரஸ்வதி புலோலி தெற்கு, புலோலி

—மனுதார்

இவ்வழக்கு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் மேலே குறிப்பிட்ட இறந்தவரின் மரணசாதனத்தை ஒப்பேற்றுவதற்காக தாக்கல் செய்யப்பட்டது. எனவே முதலிலேயே விதிக்கப்பட்ட பூரணதீர்ப்பு 1983ம் ஆண்டு கார்த்திகை மீ 21ம் திகதி பதியப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மன்றின் கட்டளைப்படி,
றிச்சேட்ஜெயராசசிங்கம்,
பதிவாளர்.

வரைவு:
இராமசுவாமி
சதானந்தன்,
சட்டத்தரணி. 086

## கல்வி

Radio and Electronic Engineering (3 Engineers 1 Technician) உடன் தொடர்பு கொள்க பொறியியல் கல்வி நிலையம் (Engineering - Education Centre) புதிய மேல் மாடிக்கட்டிடம் சாந்தி சினிமா அருகாமை யாழ்ப்பாணம். 072

## வைத்தியம்

மனநோய், வலி, அல்சர், சர்மரோகங்கள், மூலம், நரம்பு தளர்ச்சி எவ்வளவு நாட்பட்டதாயினும் பார்த்து உத்தரவாதத்துடன் சிகிச்சை அளிக்கப்படும் டாக்டர் V. T. சந்திரன் 218/5, பலாலி வீதி, கந்தர்மடம். 10856

## WANTED

Wanted on Rent/Lease, 2/3 bedroomed house within five miles of Jaffna Campus. Reply, Advt No. 158 C/o Eelanadu Ltd, Jaffna. 158

## குத்தகைக்கு

மருதனமடம் சந்தைக்கு முன்பாகச் சகல வசதிகளுடன் கூடிய எந்தவித வியாபாரத்திற்கும் உகந்த கடை ஒன்று விற்பனைக்கு அல்லது குத்தகைக்குஉண்டு. விபரங்களுக்கு: நா. முத்தையா, நாதன்ஸ் மின்சார நிலைய வீதி. நவீன சந்தை. யாழ்ப்பாணம். போன்: 23540 168

## விண்ணப்ப அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

இல. ரி/3

கோலாலம்பூர் மலேசியா என்னும் இடத்தில் மரணமெய்தியவரான இளையதம்பி முருகேசு அருளம்பலம் என்பவரின் ஆதனங்களினதும் பொறுப்புக்களினதும் தொடர்பாக மலேசியா கோலாலம்பூர் மேல் நீதமன்றத்தினால் வழங்கப்பட்ட மரணச்சொத்து நிர்வாகத் தத்துவப்பத்திரத்தில் ( ) மீளஇலச்சினை பொறுப்பதற்காக செய்யும் விண்ணப்பம் தொடர்பாக

(மரணமெய்தியவர்)

முருகேசு அருளம்பலம் கைம்பெண் சாரதாம்பிகை வறுத்தலைவிளான், தெல்லிப்பழை.

மனுதார்

எதிராக

அருளம்பலம் சிறீரங்கன் இல. 21, பேகியானபாலு ஹம்பர் பாற்று கேஸ். கோலாலம்பூர்.

எதிராளி

இவ்விளம்பரம் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குப்பின் மேற்குறிப்பிட்ட மரணமெய்தியவரின் ஆதனங்களினதும் பொறுப்புக்களினதும் தொடர்பாக மலேசியா கோலாலம்பூர் மேல் நீதிமன்றத்தினால் 1977-07-20 வழங்கப்பட்டு மரணச்சொத்து நிர்வாகப்பத்திரத்தை 1977ம் ஆண்டின் 20ம் இலக்க குடியியல் நடவடிக்கை சட்டக்கோவை 554 ப) பிரிவின் கீழ் இந்நீதிமன்றத்தால் இலச்சினையிடப்படுவதற்காக ஓர் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது

1983ம் ஆண்டு மார்கழி மாதம் 6/14 திகதி

ஆழ்வார்
சிவபாதசுந்தரம்,
பதிவாளர்.

156

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## போத்தல் தேவை

தொகையாகப் போத்தல்கள் (பியர் போத்தல் மாதிரி) தேவைப்படுகின்றது. சிறு தொகையாயினும், பெருந் தொகையாயினும் கொள்வனவு செய்யப்படும். எதிர்பார்க்கும் விலை விபரத்துடன் தொடர்பு கொள்ளவும்.

பொதுமுகாமையாளர்,
தெங்கு பனம் பொருள் கூட்டுறவு சங்கம்,
(148) மானிப்பாய்.

## விளம்பரம்

யாழ். மாநகரசபையில் பூங்கா மேற்பார்வையாளர், மருத்துவமாது மற்றும் தொழிலாளர் தரங்களில் ஏற்படக்கூடிய பதவி வெற்றிடங்களுக்கு நியமனம் பெறுவதற்குக் காத்திருப்போர் பட்டியலில் பதிவதற்கு விரும்புவோர் மாநகரசபையின் விளம்பரப் பலகையில் வெளியிடப்பட்டுள்ள விளம்பரத்திற்கமைய விண்ணப்பங்களை 27-1-1984க்கு முன் சமர்ப்பிக்கலாம்.

சீ. வீ, கே. சிவஞானம்
ஆணையாளர்

மாநகரசபை, யாழ்ப்பாணம்.
மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம், 12-1-84.
164

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

கட்டுடை மானிப்பாயைச் சேர்ந்தவரும் நுகேகொடையிலிருந்து மரணசாதனம் ஏதும் எழுதாது இறந்தவருமான கந்தர் தேவராசா என்பவரினால் விட்டிறந்த சொத்துக்களுக்கு நிர்வாகத்தத்துவம் பெறும் விடயத்தில்.

(மரணமெய்தியவர்)

மரணச்சொத்துரிமை)
நியாயாதிக்கம் ) இல.3754

கட்டுடை மானிப்பாயைச் சேர்ந்த கந்தர் தேவராசா கைம்பெண் புஸ்ப்பவதி.

மனுதார்.

எதிராக

1. தேவராசா ரமேஸ் சிறீகாந்தா
2. தேவராசா அனுரா கனிஷ்க்கன்
3. தேவராசா மகள் பிரதீபா எல்லோரும் கட்டுடை, மானிப்பாய்.

எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரண சாதனமில்லாத தத்துவ வழக்கு மேலே குறிக்கப்பட்ட இறந்து போனவரின் ஆதனங்கள் மற்றும் சொத்துக்கள் ஆகியவற்றை நிர்வகிப்பதற்காக மேற்சொல்லிய நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள எவரேனும் 1983-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 25ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுன தாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் பணிக்கப்படுகின்றீர்.

நீதிமன்றத்தின் ஆணைப்படி,
கு குலசிங்கம்,
பதிவாளர்.

1983ம் ஆண்டு புரட்டாதி மாதம் 29ந் திகதி

வரைந்தவர்
சி. இராசேந்திரன்
மனுதாரின் சட்டத்தரணி.
25-11-1983

காலம் 20-1-1984 வரை நீடிக்கப்பட்டுள்ளது

நீதிமன்றத்தின் ஆணைப்படி.
கு. குலசிங்கம்,
பதிவாளர்.
113

## லேத் இயக்குநர் தேவை

மூன்று வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள

**லேத் இயக்குநர் (Latheman) தேவை.**

நேரில் வரவும்.
தகுதிக்கேற்ற நல்ல சம்பளம் கொடுக்கப்படும்.
உடனே தொடர்பு கொள்ளவும்.

**சேவி கிளாஸ் & மெட்டல் வேக்ஸ்,**
நீர்வேலி. (090)

எமது வாடிக்கையாளர்கட்கு

**உள்ளம் கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள்!**

"கிளிநொச்சி ஐங்கரன் கச்சான் அல்வாவை"
தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
எமது யாழ். ஏக விநியோகஸ்தர்கள்

**சிவசக்தி கூல்பார்**
பஸ் நிலையம் – யாழ்ப்பாணம்.
165

## காணி/வீடு விற்பனவு

1. யாழ்ப்பாணம் சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கு அண்மையாக இரண்டு அறைகள் கொண்ட வீடு.
2. ஊரெழு மேற்கு பிள்ளையார் கோவில் வடக்கு வீதியாக 6¾ பரப்பு, வீடு கட்டக்கூடிய காணி.
3. யாழ்ப்பாணம் துண்டி றோட்டு முகப்புடன் 15 பரப்புக் காணி.
4. யாழ்ப்பாணம் அரியாலை பூதா கோவிலடியில் 9½ பரப்புக் காணி.

விபரங்களுக்கு;-
JAFFNA PROPERTY TRADES LTD.
3, நவீன சந்தை, (மேல் மாடி)
யாழ்ப்பாணம். போன்: 23698

## பாடசாலை சேவை (வான் சேவை)

இருபாலையிலிருந்து
- சென்ற் ஜோன் பொஸ்கோ
- சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
- சென்ற் ஜோன்ஸ் கல்லூரி
- கொண்வென்ட் (ஆங்கிலம் தமிழ்)
- வேம்படி மகளிர் கல்லூரி
- யாழ். மத்திய கல்லூரி

உங்கள் குழந்தைகளின் பாதுகாப்பானபிரயாணத்திற்கும், சொகுசான சேவைக்கும் நாம் உத்தரவாதமளிக்கின்றோம்.

ஆரம்பம்: 23-01-84

**நல்லூர் வீடியோ சென்ரர்**
இல. 19, முருகேசர் லேன்,
நல்லூர், யாழ்ப்பாணம்.
171

## உடன் ஆட்கள் தேவை

கண்ணாடித் தொழிற்சாலைக்கு அனுபவமுள்ள புளோவர் (Blowers) கெல்பர் (Helpers), பபுளர் (Bubblers), தேவை. வேலை பழகுபவர்களும் உடனடியாகத் தேவை. அனுபவத்திற்கேற்ப நல்ல சம்பளம் கொடுக்கப்படும்.

உடன் நேரில் வரவும்.

**சேவி கிளாஸ் & மெட்டல் வேக்ஸ்**
நீர்வேலி.
147

## நற்செய்தி



தற்போது ஈழத்துச் சீர்காழி

**மா. யோகேஸ்வரன்**

அவர்கள் மேற்படிப்புக்காக 1-1-1984 வெளிநாடு சென்றுள்ளார். அவர்களின் இன்னிசைக் கச்சேரியை ஒப்பந்தம் செய்யும் அன்பர்களுக்கும் ரசிகப் பெருமக்களுக்கும் இதைஅறியத்தருகிறோம். ஏறத்தாழ இரண்டு வருடத்தில் அவர் திரும்பியதும் அறிவிப்போம்.

இதுவரை அன்பர்கள் ரசிகர்கள் அனைவருக்கும் எங்கள் குழுவினர் சார்பில் உளமார்ந்த நன்றியையும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம் அத்துடன் வீடியோ, ஓடியோ கொப்பிகளை யாழ் நித்தி றைக்கோடிங் பாறில் பெற்றுக் கொள்ளலாம்.

அன்பு மறவாத குழுவினர்கள்

155

# "இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்!"

## பிரதமர் இந்திரா எச்சரிக்கை

புதுடில்லி, ஜனவரி 16

உறுதியான பலம்வாய்ந்த இந்தியாவை உருவாக்க வருமாறு இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி நாட்டு மக்களைக் கேட்டுள்ளார்.

இந்திராகாங்கிரஸ் அரசின் நான்காவது ஆண்டு நிறைவையொட்டி பிரதமர் இந்திரா காந்தி நாட்டு மக்களுக்கு வானொலி மூலம் உரையாற்றுகையில் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அவர் தமது வானொலிச் செய்தியில் மேலும் குறிப்பிட்டதாவது:

''கடந்த 4 ஆண்டுகளில், இந்தியா பல துறைகளில் பாரிய முன்னேற்றம் கண்டுள்ளது. உணவு உற்பத்தித் துறையில் நல்ல விளைச்சல் பெறப்பட்டுள்ளது. அத்துடன் இந்த ஆண்டு உணவு உற்பத்தி என்றுமில்லாதவாறு 14 கோடி தொன் புசலாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தினால் ஒரு கோடி குடும்பங்கள் நன்மைபெற்றுள்ளன. மின்சார உற்பத்தி கடந்த 4 ஆண்டுகளில் 50 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. அதேபோல் பெற்றோலிய உற்பத்தி 3 மடங்கு அதிகரித்துள்ளது. சிமெந்து, எஃகு, இரும்புத் தொழில்களும் கணிசமான வளர்ச்சியைக் காட்டியுள்ளன.

''விலைவாசியைக் கட்டுப்படுத்த அரசாங்கம் பலமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அதேபோல் செலவுகளைக் குறைப்பது நிதிநிலைமை என்பவற்றிலும் அரசு ஸ்திரமான முடிவுகளை எடுத்துள்ளது.

''வெளியுறவுக் கொள்கையில் நாம் முனைப்பான வெற்றிகளைக் கண்டுள்ளோம். தொடர்ந்தும் எமது வெளியுறவுக் கொள்கை, அமைதி, ஒற்றுமை, நட்புறவு என்ற அடிப்படையிலேயே பேணப்படும்.

''இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. வெளிநாட்டு சக்திகள் எமது பாதுகாப்பினைக் குலைக்க பெருமுயற்சி செய்கின்றன. அதேவேளை உள்நாட்டிலும் அதற்கு சில ஆதரவு சக்திகள் செயல்பட்டுவருகின்றன. குறிப்பாக உள்நாட்டில் ஏற்பட்டுவரும் பிரிவினைச் சக்திகளுக்கு எதிராக எமது மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்''. (சூ)



## "எதிர்க்கட்சிகள் மாநாடு தீர்க்கமானமுடிவுகளை எடுத்துள்ளது"

(சென்னை)

கல்கத்தாவில் முடிவடைந்த எதிர்க்கட்சிகளின் மாநாடு பல தீர்க்கமான முடிவுகளை எடுத்திருக்கிறது'' என்று தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

சென்னையில் 'ஜனசக்தி' நாளிதழ் வெளியீட்டுவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

''நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு எதிர்க்கட்சிகள் ஆற்றக்கூடிய பங்குபற்றியே முக்கியமாக மாநாட்டில் ஆராயப்பட்டது. அத்துடன் பலமான எதிர்க்கட்சிகளின் தேவை பற்றியும் வலியுறுத்தப்பட்டது'' என்று அவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகளின் அடுத்த மாநாட்டை சென்னையில் நடத்துவதற்கு ஏற்பாடுசெய்தமைக்காக அவர் எதிர்க்கட்சிகளுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார். (சூ)

## மூவர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

துண்டுப் பிரசுரமொன்று வைத்திருந்ததை தொடர்ந்து சந்தேகத்தின் பேரில் கைதான 3 இளைஞர்கள் விசாரணையின் பின் விடுதலை செய்யப்பட்டனர்.

கடந்த 8-ம் திகதி இரவு இவர்கள் கைதுசெய்யப்பட்டு விசாரணைக் குட்படுத்தப்பட்டனர். சந்தேக நபர்களில் ஒருவர் யாழ்ப்பாணத்திலுள்ள அகதிமுகாம் ஒன்றை சேர்ந்தவராகும்.

இவர்கள் மூவரும், குருநகரில் உள்ள ஒரு முதலாளியிடம் வேலைதேடிச்சென்று அவரைச் சந்தித்துவிட்டு திரும்பும்போதே கைது செய்யப்பட்டதாக கூறப்படுகிறது. (க)

## "வெளிநாட்டுஉதவி இல்லாமலும் தாரப்பூர் அணுநிலையம் இயங்கமுடியும்!"

புதுடில்லி, ஜன. 19

தாரப்பூர் அணுசக்தி நிலையத்துக்கு தேவையான அணுசக்தி உபகரணங்கள் வெளிநாடுகளிலிருந்துகிடைக்காவிட்டாலும் அந்த நிலையம் தொடர்ந்தும் இயங்கமுடியுமென்று இந்திய அணுசக்திக் கமிஷன் தலைவர் ராஜா ராமண்ணா தெரிவித்துள்ளார்.

''இந்நிலையத்துக்கு தேவையான அணுசக்தி மூலப் பொருட்களை நாம் வெளிநாடுகளிலிருந்து பெறமுயற்சித்தோம். ஆனால் அந்த நாடுகள் சில அதற்கு தயக்கம் காட்டி வருகின்றன. இதனால் இந்த நிலையம் மூடப்படமாட்டாது. இப்போது கண்டுபிடித்திருக்கும் கலப்பு அணுசக்தி எரிபொருள் மூலமாக இந்த தேவையினைப் பூர்த்திசெய்து கொள்ளமுடியும். எனவே நாம் இம்மூலப்பொருள்களுக்கு வெளிநாட்டினை நம்பியிருக்க வேண்டிய தேவையில்லை'' என்றும் அவர் தெரிவித்தார். (சூ)

## வட இந்தியாவில் கடுங்குளிர்

புதுடில்லி ஜன, 16

இந்தியாவின் வட பகுதியில் கடுங்குளிர் நிலவுகிறது.

பஞ்சாப், அரியானா, சண்டிகார், உத்தரப்பிரதேசம் ஆகிய பகுதிகளில் குளிர் அதிகமாகக் காணப்படுகிறது. இக்குளிரினால் சேதம் ஏதும் ஏற்படாத போதும் இது அபாயம் நிறைந்ததென்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (சூ)

## அங்கோலாவிலிருந்து தென்னாபிரிக்க துருப்புகள் முற்றாக வாபஸ்!

கேப்டவுன், ஜன. 16

அங்கோலாவில் ஊடுருவல் செய்த சகல தென்னாபிரிக்கத் துருப்புகளும் அங்கிருந்து வெளியேறிவிட்டன.

இதனை தென்னாபிரிக்கா உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது.

அங்கு நிலைகொண்டிருந்த 2000 துருப்புகளும், கவச இராணுவ வாகனங்களும் தற்போது தென்னாபிரிக்க எல்லைக்குள் வந்துவிட்டதாகவும் தென்னாபிரிக்க அரசு தெரிவித்துள்ளது.

தென்மேற்கு ஆபிரிக்க விடுதலை இயக்கத்தின் நடவடிக்கைகளை முறியடிக்க கடந்த வாரம் தென்னாபிரிக்கா அங்கோலாவுக்குள் 200 மைல் தூரம் ஊடுருவிச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (சூ)

## உண்ணாவிரதபோராட்டத்துக்கு கம்யூ. கட்சி ஆதரவு

(யாழ்ப்பாணம்)

பாதிக்கப்பட்ட பல்கலைக் கழக தமிழ் மாணவர்களின் உண்ணாவிரதப் போராட்டத்துக்கு தமது பூரண ஆதரவினை வழங்குவதற்காக இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியாழ். பிரதேசக்கிளை தெரிவித்துள்ளது.

யாழ். பிரதேசக்கிளை செயலாளர் திரு. எஸ், விஜயானந்தன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்ததாவது: அண்மையில் ஏற்பட்டகலரத்தினால் பேராதனை, கொழும்பு மொரட்டுவ பல்கலைக் கழகங்களிலிருந்து இடம் பெயர்ந்து வந்த பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு பல்கலைக்கழகங்களில் தேவையான கல்வி பீடங்களைத் திறந்து தங்களை அங்கு அனுமதிக்கும்படி கோரிக்கை விடுத்தும் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டுள்ளார்கள். இவர்களது கோரிக்கை நியாயமானதாகும். அதனால் இவர்களது நியாயமான கோரிக்கையை ஏற்று அரசாங்கம் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு பல்கலைக் கழகங்களில் புதிய பீடங்களை நிறுவி இவர்களை அங்கு சேர்த்துக் கொள்ளும்படி எமது கட்சியின் கிளை கேட்டுக் கொள்கிறது. (சூ)

## ஐ.நா. சமாதானப் படைமீது கிழக்குலெபனானில்தாக்குதல்!

பெய்ரூட், ஜன. 16

லெபனானின் கிழக்குப் பகுதிகளில் நேற்று நீண்ட நேரம் மோதல்கள் இடம்பெற்றன. இம்மோதல்களில் ஐ. நா சமாதானப்படையினுள்ள பிரெஞ்சு அமெரிக்கப்படைகள் தாக்கப்பட்டன. ராக்கெட்டுகள், சிறுபீரங்கிகள், மற்றும் கைக்குண்டுகள் என்பன இத்தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்டன.

சமாதானப்படையில் உள்ள பிரெஞ்சு, அமெரிக்கப்படைகள் இத்தாக்குதலுக்குப் பதிலடி கொடுத்தன. ஆனால் சேதங்களின் விபரங்கள் உடன் வெளியிடப்படவில்லை.

லெபனானிலுள்ள தீவிரவாத முஸ்லிம் பிரிவொன்றே இத்தாக்குதலை நடத்தியது. சமாதானப்படையைச் சேர்ந்தஒருவர் கொல்லப்பட்டுள்ளார் என்றே இறுதியாகக் கிடைத்தசெய்தி வென்று கூறுகின்றது. இருவர் காயமடைந்ததாகவும் அது கூறுகின்றது.

இதேவேளை, பிரிட்டனின் உயர் ராஜதந்திரி ஒருவர் அண்மையில் சிரியா சென்றிருந்தார். அவர் காலவரையின்றி ஐ. நா. சமாதனப் படையிலுள்ள பிரிட்டிஷ் துருப்புகள் லெபனானில் நிறுத்தி வைக்கப் படமாட்டா என்றும் விரைவில் அவை வாபஸ் பெறப்படுமென்றும் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க, இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் விசேட மேற்காசியத் தூதுவர் திரு. ரமேஷ்பண்டாரி பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் திரு, யாஸீர் அரபாத்தைச் சந்தித்தார். இச் சந்திப்பு டூனிஸியாவில் நேற்று நிகழ்ந்தது திருமதி காந்தியின் விசேட செய்தியொன்று அரபாத்திடம் பண்டாரியினால் கையளிக்கப்பட்டது. அச்செய்தியில் பாலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கு இந்தியாவின் ஆதரவு தொடர்ந்திருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. அரபாத் அச்செய்திக்கு நன்றி தெரிவித்தார். அப்போது, இந்தியா பாலஸ்தீன இயக்கம்மீது கொண்டுள்ள நன்மதிப்பைத்தாம் நன்கு அறிந்துள்ளதாகக் குறிப்பிட்டார். (கி)

## பதவியுயர்வு

(மாவிட்டபுரம்)

யாழ். பொலிஸ் அதிபரின் உதவியாளராகக் கடமையாற்றி வந்த பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ஏ. நல்லையா வடபிராந்திய கள்ளக் குடியேற்றத்தடுப்பு அலுவலகங்களின் மேற்பார்வையாளராகப் பதவி உயர்வு பெற்று நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

வடபிராந்தியத்திலுள்ள யாழ்ப்பாணம், காங்கேசன்துறை, கிளிநொச்சி, மன்னார், வவுனியா ஆகிய கள்ளக்குடியேற்றத் தடுப்பு அலுவலகங்களின் மேற்பார்வையாளராக இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

## அமைச்சருக்கு நன்றி

(யாழ்ப்பாணம்)

இரண்டரை லட்சம் ரூபா செலவில் போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்த பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு, செ. இராசதுரைக்கு வலி தென்மேற்கு தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவு சங்க தலைவர் திரு. யோ, செபஸ்தியாம்பிள்ளை நன்றி தெரிவித்துள்ளார்.

அமைச்சருக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், தங்கள் சிபார்சுடன், பனைஅபிவிருத்தி சபை தலைவரால், இத் தொழிற்சாலைக்கான கட்டடம் கட்ட பணம் ஒதுக்கப்பட்டுள்ளதென்றும், இந்த உதவியை செய்தமைக்காக எமது சமூக மக்கள் சார்பில் நன்றியை தெரிவிப்பதாகவும் கூறப்பட்டுள்ளது. (க)

### மணிவாக்கு

பிறர் குறை காண்பவன் அரை மனிதன்; தன்குறை காண்பவன் முழுமனிதன்.

— சாக்ரடீஸ்

## நமது நோக்கு

### சமநிலை நாடுக

'குப்பைக் கருத்துக்களை அடுக்குமொழியில் அலங்காரமாகப் பேசினாலும் எழுதினாலும் அது குப்பை குப்பைதான்'' என்கிறார் அமெரிக்க அறிஞரும் அரசியல் ஞானியுமான பெஞ்ஜமின் பிராங்க்லின்.

மிகப் பொறுப்புவாய்ந்த பதவியை வகிக்கும் எவரும் இந்த மணிவாக்கை தினந்தோறும் பாராயணம் பண்ணுவது வீண் போகாது.

பொங்கலுடன் ஒரு நல்ல உதாரணம் இதற்கு எதிர்மறையாகக் கைக்கெட்டியது நல்ல அறிகுறியென்று கருதலாம்.

சர்வகட்சி மாநாட்டு-தற்போது வட்டமேசை-பற்றிய தினசரித் தகவல்களைப் பத்திரிகைகளுக்குக் கொடுக்கும் பொறுப்பு கப்பல்துறை அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

மிகப் பொறுப்பான கடமை அவருக்கு தனிய வழங்கப்படவில்லை. மேலும் சில பிரதிநிதிகளும் அதில் சேர்க்கப்பட்டபோதும் அவர்கள் கப்பல்துறை அமைச்சரில் பூரண நம்பிக்கை கொண்டிருப்பதால் அவரே இதனைப் பொறுப்பெடுத்திருக்கிறார்.

அவருடைய சொந்தத் துறை கப்பல்துறையானாலும், அவருடைய கப்பல்கள் ஒன்று அல்லது இரண்டு திசை திரும்பினாலும் நாட்டுக்கு அதோ கதியென்று கருதுவதற்கில்லை.

இன்றைய மாநாடு திசை திரும்பினால், புறப்பட்ட கப்பல்-வரலாறு காணாத கப்பல்- துறை சேர்வதற்கு தடங்கல் ஏற்பட்டால் நாடனைத்துக்கும் பேராபத்து. இதனை நன்கு உணர்ந்திருக்கிறார் இளமையும் உற்சாகமும் கொண்ட அமைச்சர் லலித்; சிலதினங்களுக்குள் இவ்வளவு முதிர்ச்சியடைந்ததும் இக்கால அற்புதங்களில் ஒன்றெனலாம்.

பத்திரிகை நிருபர்கள் வாய்க்குவந்த வினாக்கள் எதனையும் கேட்பார்கள்; அவர்கள் இந்தத் துறையில் அனுபவமுடையவர்களாவதற்கு நீண்டகாலம் எடுக்கும்; அவருள் ஒருவர் ''இன்று தமிழ்ப் பிரதேசங்களில் மீண்டும் ஆரம்பமான பயங்கரவாதம், கொள்ளை மகாநாட்டைப் பாதிக்குமல்லவா?'' என்றுகேட்டார்.

அதற்கு உடன் பதிலாக அமைச்சர் அளித்த பதில் அவருடைய பொறுப்புணர்ச்சிக்குப் பொருத்தமான உதாரணம். ''இச்சம்பவங்கள் இவ்விதமான பெரும் மகாநாட்டை எவ்வாறு குழப்ப முடியும்; நாம் கூடி காணமுயலும் முடிவுகள் விரைவாகக் கண்டுபிடிப்பதற்கு உதவுமென்றே சொல்ல வேண்டும்''

என்ன சாதுரியம்; பாரதூரமான விடயங்கள்பேசப்படுகின்றன; நாட்டின் சமூகங்களின் பிரதிநிதிகள் அனைவரும் பிரசன்னமாயிருக்கின்றனர். அரசியல் ரீதியில் மிகப்பலம் பொருந்திய சந்நிதானம்; ஒற்றுமைப்பட்ட முடிவுகள் கைகூடினால் நாட்டை எதிர்நோக்கும் பேராபாயம் நீக்கப்பட்டு விடும்

இதனை உணர்ந்த அமைச்சர் லலித் அத்துலத் முதலியின் மனப்போக்கு இன்று அமைச்சர்கள் அரசியல்தலைவர்களுக்குண்டானால் கப்பலுக்கு ஆபத்திருக்கமாட்டாது.

ஆனால் இதற்கு மாறாக பத்திரிகைகள் வெளியிடும் கருத்துக்களும், ஆசிரியர் தலையங்கங்களும் இன்றும் முற்றாகத் திருந்திய பாடில்லை.

பழைய பாணியில், ''வடபகுதி பயங்கரவாதிகள் தங்கள் கோழைச் செயல்களில் தொடர்கின்றனர்; இதனைக் கண்டிக்க அங்கு பேனை எடுப்பவர் எவரும் முன்வருகின்றனர் இல்லையே'' இக்கண்டனம் யாருக்கு எவ்வாறு உதவியளிக்கும்.

பயங்கரவாதம், அது எங்கு என்றாலும் கண்டிக்கப்பட வேண்டியது என்று நாம் கூறிவருகின்றோம். ஆனால் இங்கு நடைபெறும் போராட்டம், இன்றும் அது பயங்ரேவாதமென்று கண்டித்து காலங்கழிக்கலாமா?

அதே போன்றுஇன்னொரு ஆங்கில தினசரியில் இலங்கை பிரபல வங்கி நிபுணர் இன நெருக்கடிபற்றி எழுதிய ஆய்வுக் கட்டுரை சிங்கள சமூகத்தைத் தீவிரப்படுத்த எழுதிய 'ஆராய்ச்சி' என்று கொள்ளலாம்.

'தனக்கறியாச் சிங்களம் தன் பிடரிக்குச் சேதம்' என்ற வாசகத்தின் ஞானத்தை உணராத வங்கி நிபுணரை 'ஐலண்ட்' வாரமலரில் வைத்து 'வாட்டியிருக்கிறார்' அரசியல் அறிஞர் மேர்வின் டி சில்வா.

யார் எதனைப் பேசினாலும் எழுதினாலும் 'கணக்காயிருக்கணும்' என்பார்கள். கணக்கிலே கட்டுப்பட்டு விட்டால்அதுவேசமநிலைக்கு இட்டுச் செல்லும் வழியென்பதை இன்று மக்களும் தலைவர்களும் உணர வேண்டிய அவசியம் என்றுமில்லாதவாறு ஏற்பட்டிருக்கிறது.

# 25 ஆண்டுகாலம் 'ஈழநாடு'

# ஆற்றிவரும் சமுதாயப் பணி

தேசிய தமிழ்த்தினசரியான ''ஈழநாடு'' பத்திரிகையின் இருபத்தைந்து ஆண்டுகள் இலக்கியப் பணிபற்றிய ஆய்வரங்கு ஒன்று சென்ற தைப்பொங்கல் தினத்தன்று யாழ். கல்வி நிலைய மண்டபமொன்றில் நடைபெற்ற போது இப்பத்திரிகையின் வளர்ச்சி, இலக்கியச்சேவை, சமூதாயப்பணி இவைபற்றியும் சில குறைபாடுகள் பற்றியும் இலக்கிய ரசனையுடனும் நட்புறவு நகைச்சுவையுடனும் பல கருத்துக்கள் ஈழத்தின் பிரபல எழுத்தாளர்களால் பல வேறு கோணங்களிலிருந்து அலசி ஆராயப்பட்டது.

ஆய்வுகளை நடத்தினார்கள்.

இப்படி ஒரு சந்திப்பு இங்கு நடைபெற்று பல மாதங்கள் என ஜீவா கூறினார்.

அவசரமான இந்த உலகத்தில், நாலுபேர் சந்தித்து இருபத்தைந்து ஆண்டுகாலச் சரித்திரத்தை இலக்கிய ரசனையுடன் அலசுவதென்றால் அவ்வளவு இலேசான காரியமல்லத்தான்.

தினசரிப் பத்திரிகைச் செய்திகள் அன்றன்றாட மனிதர்களை என்னவெல்லாமோ செய்து கொண்டிருந்தாலும் ஓய்வான சந்தர்ப்பத்தில் இவற்றை ஆராயும் பொழுது ஏதோ ஒரு இலக்கியச்சுவை

### க. கணேசலிங்கம்

பொங்கல் தினத்தன்று தம் உள்ளத்தில் பொங்கிய உணர்ச்சிகளை சுவையான, நயமான, ஆழமான வார்த்தைகளால் அழகுடன் படைத்தார்கள் இந்த எழுத்தாளர்கள். இவற்றைக் கேட்கும் நல்லசந்தர்ப்பம் கிடைத்தது.

ஈழத்தின் பிரபல எழுத்தாளர் திரு. சொக்கன் தலைமையில் நடைபெற்ற இந்த ஆய்வரங்கில் திருவாளர்கள் செங்கை ஆழியான், செம்பியன் செல்வன், டொமினிக் ஜீவா, புத்தொளி, குமரன் ஆகியோர் கலந்துகொண்டு

பிறக்கத்தான் செய்கிறது.

கேட்பதற்கும் கேட்டுக் கொண்டே இருக்கலாம் போலவே தோன்றுகின்றது:

#### பத்திரிகைகளின் மூன்று நிலை

பத்திரிகைகளின் மூன்று நிலைகள் பற்றி திரு. சொக்கன் வெகு அழகாகவே குறிப்பிட்டார். சாதாரண வாசகர்களின் தரத்துக்கு இறங்கும் நிலை, வாசகர்களின் தர உயர்வுக்கேற்ப ஏற முயற்சிக்கும் நிலை, வாசகர்களை உயர்ந்த தரத்துக்கு ஏற்றுகின்றநிலை.

இவ்வித மூன்று நிலைகளில் ''ஈழநாடு'' பத்திரிகை மூன்றுவது நிலையில் நிற்பதாக அவர் எடுத்துக்கூறியபோது எத்தனையோ கஷ்டங்களுக்கு மத்தியில் வளர்ந்து கொண்டிருக்கும் ஈழநாடு பற்றி ஒரு தனிமதிப்பே ஏற்பட்டது.

#### ஆய்வரங்கில்

#### எழுத்தாளர்கள்

#### விமர்சனம்

ஈழநாடு பத்திரிகை செய்திகளைத் திரிக்காமல் பத்திரிகா தர்மத்தைக் கடைப்பிடித்து வருவதாகவும் அவர் எடுத்துக் கூறினார்

ஈழநாடு இன்று ஒரு நிலையான இடத்தை அடைந்து விட்டுள்ளதாகத் தெரிவித்த சொக்கன், விளம்பரம் மட்டும் பத்திரிகையாகி விடாது எனத் தமது கருத்தைக் குறிப்பிட்டார்.

#### செங்கை ஆழியான்

செங்கை ஆழியான் இருபத்தைந்து வருட ஈழநாட்டுப் பணிபற்றி ஆழமாகவே பார்த்தார்.

ஈழநாடு இலக்கியத் துறைக்கு ஆற்றிய பணியை

(5-ம் பக்கம் பார்க்க)

### புன்னாலைகட்டுவன் மக்கள்

## மாணவருக்கு ஆதரவாக அடையாள உண்ணாவிரதம்

(ஊரெழு)

இடம்பெயர்ந்த பல்கலைக் கழகத் தமிழ் மாணவர்கள், யாழ். பல்கலைக்கழகத்தில்மேற்கொண்டிருக்கும் சாகும்வரை உண்ணாவிரதத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் புன்னாலைக்கட்டுவன் பொதுமக்கள் ஒரு நாள் அடையாள உண்ணாவிரதத்தைமேற்கொண்டனர்.

நேற்று திங்கட்கிழமை காலை 7.30 மணிக்கு புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவைப் பிள்ளையார் கோவிலின் முன்பாக ஆரம்பமான இந்த அடையாள உண்ணாவிரதம் மாலை 5 மணிக்கு முடிந்தது.

புன்னாலைக்கட்டுவன் கிராமத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் மாணவர்கள் உட்பட ஆண்களும், பெண்களுமாக ஏராளமான பொதுமக்கள் இந்த உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டனர்.

### மாணவரைச் சந்தித்தார்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் மாணவரைச் சந்தித்த யாழ் சட்டத்தரணிகளுடன் சட்டத்தரணி ரி. லிங்கராசாவும் சென்றிருந்தார் 'ஈழநாடு' இதழில் திரு ரி. நாகராசா என்று வந்திருப்பது தவறாகும். (உ)

### மிளகாய் விதைகள் விநியோகம்

(மாவிட்டபுரம்)

சமீபத்திய வெள்ளத்தினால் விவசாயிகளின்மிளகாய்நாற்று மேடைகள் முற்றாக அழிந்து விட்டதால் விவசாயிகளின் தேவைக்காக புதிய மிளகாய் விதைகள் தருவிக்கப்பட்டுள்ளன.

## மாணவர்களின் தனிப்பட்ட பிரச்னையல்ல

கடந்த ஆடிக் கலவரம் ஏற்படுத்திய தாக்கம் மனதை விட்டு மறையவில்லை. ஆறு மாதங்கள்தான் கடந்திருக்கிறது. பாதுகாப்பின்மை காரணமாக வேலைக்குத் திரும்ப முடியாது என ஊழியர்கள் கூட்டங்களைக் கூட்டி தீர்மானம் எடுக்கிறார்கள்.

இந்நிலையில் கலவரத்தின் முன்பே தாக்குதலுக்குட்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் அதாவது தென்னிலங்கையில் இருந்து இடம்பெயர்ந்த மாணவர்கள் அங்கு எமக்குப் பாதுகாப்பு இல்லை. படிப்பதற்குப் பாதுகாப்பா? அன்றேல் உயிருடன் இருப்பதற்குப் பாதுகாப்பா? எதுவுமே உத்தரவாதம் இல்லாத நிலையில் நாம் எப்படி அங்கு செல்ல முடியும்? எமது நியாயமான கோரிக்கைக்கு நிரந்தர தீர்வு வேண்டுமென அகிம்சையில் நம்பிக்கை வைத்துப் போராட்டத்தைத் தொடக்கியிருக்கிறார்கள்.

கட்டம் கட்டமாக உண்ணாவிரதமிருந்தவர்கள் இன்று சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்து ஒரு கிழமை ஓடிச்சென்றுவிட்டது. அதைவிட அவர்களின் கோரிக்கைக்காக இரு தினங்களாக ஹர்த்தால் வடபகுதி எங்கும் அனுஷ்டிக்கப்பட்டது.

ஆனால் அடுத்த நாளான 14-ம், 15-ம் திகதிகளில் ஏட்டிக்குப் போட்டியாக பட்டாசுகளைக் கொளுத்தி ஆரவாரமாக பொங்கலைக் கொண்டாடுகிறோம். அதுவும் தமது உயிரை துச்சமாக மதித்து சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ள அந்தத் தியாக உள்ளங்களின் அயலிலேயே வெடிகள்,வாணவேடிக்கைகள்.

## மக்கள் கருத்து

இடம்பெயர்ந்த மாணவரின் பிரச்னை அவர்களது தனிப்பட்ட பிரச்னையல்ல. அது முழு தமிழினத்தின் பிரச்னை. தமிழ்ப்பெற்றோரின்ஒவ்வொரு குழந்தையும் நாளை பல்கலைக்கழகம் செல்லும்போது ஏற்படும் பிரச்னை. இதை ஒவ்வொருவரும் நன்கு உணர வேண்டும்.

இன்று எமக்கு ஏற்பட்டிருக்கும் இன்னலுக்கு நமது சுயநல போக்கும் எதையும் இலகுவில் மறக்கும் மனப்பான்மையும் தான்முக்கிய காரணம்.

நாம் நாட்டு நடப்புகளைப் புரிய சக்தி இல்லாதவர்களாக மாறிவிட்டோமா? அவன் இருந்துவிட்டுப் போகட்டும் நமக்கு என்ன என்ற மாற்றான் மனப்பான்மையா? ஏன் இந்த அவச்செயல், சிந்திக்கக்கூடியவர்களுக்கு இது சமர்ப்பணம்.

கிருபா

கந்தர்மடம்

### கேட்டு அலுத்துப்போன பின்பே போராட்டம்

ஜனாதிபதி அண்மையில் டில்லியில் கூறிய அண்ணல் காந்தியின் வழியையே மாணவர்கள் பின்பற்றுகிறார்கள். நான்கு மாதங்கள் கேட்டுக் கேட்டு அலுத்துப்போய் அரசாங்கம் விதித்த காலக்கெடு நெருங்கிய பின்னரே இந்த உண்ணாவிரதத்தை ஆரம்பித்து இருக்கிறார்கள். அங்கு போய் அஞ்சியஞ்சி மரணத்தை எதிர்நோக்குவதிலும் பார்க்க, தம் மண்ணில் வெட்டு, கொத்து, எரிப்பு இல்லாமல் மரணத்தைத் தழுவுவது இலகு எனக் கருதுகிறார்கள். தமிழ் மாணவர்களுக்கு வடக்கிலும் கிழக்கிலும் இடமளிப்பது தமிழினத்திற்கு நிம்மதி தரக்கூடியது. இது சிங்கள மாணவர்க்கும் அவர்களுடைய பகுதிகளில் கூடிய சந்தர்ப்பத்தை அளிக்கும். இந்த நடவடிக்கை எமக்கு நல்லது, அவர்களுக்கும் மிகச்சிறந்தது!

ந. தேவராஜன்

அரசடி வீதி

# "ஆங்கிலக் கல்வியில் அக்கறை காட்டுவதில்லை!"

## கல்வி அதிகாரி தியாகராசா கவலை

[மானிப்பாய்]

"ஒவ்வொரு ஆசிரியர்களும் மாணவர்களின் பதில் பெற்றோராகவிளங்கி பாடசாலை என்னும் குடும்பத்தினை நன்கு வளர்த்தெடுக்கவேண்டும். மாணவர்களும் ஆசிரியர்களும் பெற்றோரும் ஒன்று சேர்ந்தாலே பாடசாலைகள் புதிய திருப்பங்களைப் பெற்று மாணவர்களை நற்பிரசைகளாக்கமுடியும். இதற்கு எல்லோரினது ஒத்துழைப்பும் ஒரேசமயத்தில் தேவைப்படுகின்றது"

இவ்வாறு கோப்பாய்தெற்கு றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் வித்தியாலயத்தில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுள்ள ஆசிரியை திருமதி எம். ஆர். பாலேந்திரா, ஓய்வுபெற்றுள்ள ஆசிரியை திருமதி என். தெய்வேந்திரன் ஆகியோரின் சேவைநலன் பாராட்டுவிழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ் கல்வித் திணைக்கள கல்வி அதிகாரி திரு. எஸ். தியாகராசா கூறினார்.

வித்தியாலய அதிபர் திருமதி பீ சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்ற விழாவில் திரு. தியாகராசா தொடர்ந்து பேசுகையில், ஒவ்வொரு பாடசாலையிலும் ஆரம்பக் கல்விக்கான வசதிகளை கல்வித்திணைக்களம் கூடுதலாகச் செய்து கொடுத்திருக்கின்றது. ஆரம்ப வகுப்புகளிலிருந்தே ஆங்கில பாடம் கட்டாயமாக்கப்பட்ட போதிலும், நமது மாணவர்கள் ஆங்கிலக் கல்வியில் அக்கறை காட்டுவதில்லை இந்நிலை மாறவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். இப்பாடசாலையின் அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு எம். கே இளையப்பு ஜே. பி. அவர்களின் பணிகள் இப் பாடசாலையின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவுகின்றது என்றும் கூறினார்.

ஓய்வுபெற்ற யாழ் அரசாங்க செயலக காரியாலய உதவியாளரும், வித்தியாலய அபிவிருத்திச்சங்கச் செயலாளருமாகிய "சமூகஇரத்தினம்" திரு. எம். கே. இளையப்பு ஜே. பி. திரு பொ. வரதகுலசிங்கம், வித்தியாலய அபிவிருத்திச் சங்க உபதலைவர், திரு சி சுந்தரம், வித்தியாலயஆசிரியர் திரு. இ. இராஜையா, கண்டி கந்தகட்டிய மகாவித்தியாலய ஆசிரியை செல்வி அந்தோனிப்பிள்ளை, அல்போன்சா கோப்பாய் செல் மேரீஸ்விளை யாட்டுக்கழகச் செயலாளர் திரு. ஜே ஞானப்பிரகாசம் திரு இ. இலட்சுமிகாந்தன் ஆகியோரும் பாராட்டுரை வழங்கினர்கள்.

# 25 ஆண்டுகாலம் 'ஈழநாடு ...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

விட சமூகப்பணி கூடுதலானது என்பதே அவரது கணிப்பு.

ஈழநாடு பத்திரிகா தர்மத்தைப் பேணிக்காப்பாற்றி வருகின்றது எனக்குறிப்பிட்ட அவர் ஈழநாடு தனக்கென 'ஈழகேசரி' 'மறுமலர்ச்சி' போன்ற பத்திரிகைகளைப் போன்று, தனக்கென ஒரு எழுத்துலகப் பரம்பரையை உருவாக்கவில்லையெனக் குறைபட்டுக் கொண்டார்.

இலங்கையில் தமிழ் எழுத்தாளர்கள் அதிகம், ஆனால் எழுதுபவர்கள் குறைவு, எழுதுவதற்கு ஆட்கள் குறைவு எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இலக்கிய ஆக்கங்களுக்கு பத்திரிகைகள் போதுமான அளவு சன்மானம் கொடுத்தாக வேண்டும் எனவும் அவர் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டார். எழுத்தாளனுக்குரிய கௌரவத்தை ஈழநாடு போன்ற பத்திரிகைகளும் தரத்தவறிவிட்டது எனவும் அவர் சிறிது வருத்தத்துடன் சொன்னார்.

### டொமினிக் ஜீவா

மல்லிகை ஆசிரியர் திரு. டொமினிக் ஜீவா பேசுகையில் சிறிதுகாலம் மந்த நிலையிலிருந்து வந்த இலக்கியச் சந்திப்புக்களும் கலந்துரையாடல்களும் மீண்டும் நடைபெறத் தொடங்கியுள்ளது மிக்க வரவேற்கத்தக்கதொன்றே என்றார்.

"யாழ். பொது நூல் நிலையமும் ஈழநாடு காரியாலயமும் 81 ஜூனில் எரிக்கப்பட்டபோது சர்வதேசமும் கண் கலங்கின என்றார்!

"ஈழநாடு இந்த மண்ணில் மலர்ந்த பத்திரிகை. இலங்கையின் வேறெந்தப் பிரதேசத்திலும் தேசிய தினசரியொன்று இப்போது நடத்தப்பட்டுவரவில்லை.

தமிழ் தேசிய இனத்தின் வளர்ச்சியில் ஈழநாட்டுக்குக் கணிசமான பங்கு உண்டு.

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் செய்திகளுக்கு ஒரு காலத்தில் கொழும்புப் பத்திரிகைகளையே பார்க்க வேண்டிய நிலை இருந்தது. இதனை ஈழநாடு மாற்றிவிட்டது எனவும் குறிப்பிட்ட அவர் இலக்கிய கர்த்தாக்களைப் பாராட்டி உரிய கௌரவமளிக்க ஈழநாடு முன்வர வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

### செம்பியன் செல்வன்

திரு. செம்பியன் செல்வன் தமது உரையில் 'எல்லாவற்றுக்கும் கொழும்பா? என்று யாழ்ப்பாணத்திலிருந்து கேட்டுக் கொண்டிருந்தவர்களுக்கு 'ஈழநாடு' நல்ல பதிலைக் கொடுத்தது' என்றார்.

யாழ்ப்பாணத்தில் வாழுகின்ற இலக்கிய வாதிகளுக்கு ஒரு நல்ல அந்தஸ்தை ஈழநாடு கொடுத்தது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கிழக்கிலங்கையின் பிரபல மூத்த எழுத்தாளர் திரு. வ. அ. ராசரத்தினத்தின் 'துறைக்காரன்' என்ற நாவலை ஈழநாடு ஆரம்ப காலத்தில் வெளியிட்டதன் மூலம் இளைய தலைமுறை எழுத்தாளர்களுக்குப் புதிய சிந்தனையை ஊட்டிவிட்டது என்றார்.

திரு. புத்தொளி சிவபாதமா தமது உரையில் ஆசிரியர்களாகப் பணியாற்றிய திரு ஹரன் திரு ராஜஅரியரத்தினம் ஆகியோரையும் செய்தி ஆசிரியராகப் பணிபுரிந்த திரு எஸ். எம். கோபாலரத்தினத்தின் கடும் உழைப்பையும் பாராட்டிப் பேசினார் திரு. வி. என். பி. யின் பணிபற்றியும் குறிப்பிட்டார்.

இப்போதுள்ள ஆசிரியர்குழுவும் மிக்க சுறுசுறுப்பாக இயங்குவதாலேயே பத்திரிகை வளர்ச்சியடைந்து வருவதைக் காணக்கூடியதாக இருப்பதாகக் கூறிய அவர் மிகக்குறைந்த வசதிகளுடன் 'ஈழநாடு' கொழும்புப் பத்திரிகைகளுடன் நெஞ்சை நிமித்திக் கொண்டு நிற்பது மிகவும் பாராட்டத்தக்கதே என்றார். காலை எழுந்தவுடன் ஈழநாடு படிக்க வேண்டும் என்ற தாகத்தை ஈழநாடு இப்போது ஏற்படுத்திவிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

திரு குமரன் பேசுகையில், 77ம் ஆண்டுக்குப் பின்ஈழநாடு ஒரு புதுத் துணிச்சலுடன் இயங்கிவருவதாகக் குறிப்பிட்டார். அவர் ஆசிரிய தலையங்கங்கள் தம்மைக் கவர்ந்து வந்துள்ளதாகவும் எடுத்துக் கூறினார்.

திரு. ஐயா. சச்சிதானந்தம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

பத்திரிகைத் துறையில் ஈடுபாடுள்ளவர்களைச் சந்திக்க வைத்துத் தரமான இலக்கிய ஆய்வுரைகளைக் கேட்கச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தமைக்கு அவருக்கு நன்றி கூறலாம்.

# 'ஒன்பது உயிர்கள் ஊசலாடுகின்றன"

## ஜனாதிபதிக்கு அவசரத் தந்தி

(யாழ்ப்பாணம்)

"ஒன்பது உயிர்கள் ஊசலாடுகின்றன. நியாயமான கோரிக்கையை முன்வைத்துப் போராடும் எதிர்காலச்சந்ததியினர் பிரச்சினையை உடன் தலையிட்டுத் தீர்த்துவைக்கவும்."

இவ்வாறு கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ். மாவட்ட பிரதேச செயலாளர் திரு. எஸ். விஜயானந்தன் ஜனாதிபதி திரு ஜே ஆர். ஜெயவர்த்தனவுக்கு அனுப்பி வைத்துள்ள அவசரத்தந்தியில் குறிப்பிட்டுள்ளார்.

சாகும்வரை உண்ணாவிரதமிருக்கும் இடம்பெயர்ந்த பல்கலைக்கழக மாணவர்கள் பிரச்சினைக்குத் தீர்வுகாணவேண்டியதன் அவசியத்தைஇத்தந்தியில் வற்புறுத்தியுள்ளார்.



# கோலாலம்பூர் பயணம்

[உரும்பராய்]

உரும்பராய் கருணாகரப் பிள்ளையார் தேவஸ்தான முதல்வர் சிவாசாரியமணி சிவஸ்ரீ வைத்தீசுவரக்குருக்கள் சபாரத்தினக்குருக்களைக் கோலாலம்பூர் வாழ் சைவன்பர்களின் அழைப்பின்பேரில் அங்கு சென்றுள்ளார்.

கோலாலம்பூர் லோறேங், ஸ்கொட் வீதி ஸ்ரீகந்தசாமி கோயில் பாலஸ்தாபனக்கிரியைகளைத் தலைமை தாங்கி நடத்தச் சென்றுள்ள ஸ்ரீ சபாரத்தினக்குருக்களுடன், சாதகாசாசிரியர் சிவஸ்ரீ வி. சோமசுந்தரசர்மா (நாராயணன்) வும், கூடச்சென்றுள்ளார். ஸ்ரீ கந்தசாமி கோவிலில் எதிர் வரும் தைப்பூசத்தினமான வியாழனன்று இடம்பெறும் பாலஸ்தாபனக் கிரியைகளை அடுத்துப் புனருத்தாரண வேலைகள் துரிதமாக நடைபெற்று விரிவான முறையில் மஹாகும்பாபிஷேகமும் இடம்பெறவுள்ளது.

சிவஸ்ரீ வை. சபாரத்தினக் குருக்கள், வேதஆகம புராண விற்பன்னரும், உரும்பராய் கருணாகரப்பிள்ளையார் கோயில் முதல்வருமான காலஞ்சென்ற சிவஸ்ரீ அ. வைத்தீசுவரக் குருக்களின் சிரேட்ட புதல்வரும், அண்ணாசாமிக் குருக்கள் எனப் பெயர்பெற்ற ஸ்ரீ அருணாசல சாஸ்திரிகளின் தலைமாணவருமாவார் என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

கோலாலம்பூர் லோறேங் ஸ்கொட் வீதி ஸ்ரீ கந்தசாமி கோயிலின் பிரதம சிவாசாரியார் சிவஸ்ரீ வை. சபரமேஸ்வரக்குருக்கள் பாலஸ்தாபன கும்பாபிஷேக ஏற்பாடுகளைச் செய்துவருகிறார்


## முடிவு திகதியில் மாற்றம்
## இடுகுவேலி
# வாசகர் போட்டி

நீண்ட காலத்திற்குப் பின்னர் ஈழத்து வாசகர் மத்தியில் பரபரப்பான தொடர் நாவல் என்ற புகழைச் சம்பாதித்திருப்பது 'ஈழநாடு' வாரமலரில் வெளிவந்து கொண்டிருக்கும்

'இடுகுவேலி தொடர் நாவலின் முடிவு எப்படி அமையும்?'

சுருக்கமாக உங்கள் முடிவை எழுதி அனுப்பி வையுங்கள். நாவலின் முடிவைச் சரியாக எழுதி அனுப்பும் வாசகருக்கு

**500 ரூபா பரிசு வழங்கப்படும்!**

இப்பரிசுத் தொகையை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள,
சம்பந்தன் வைத்தியசாலையும் வைத்திய ஆலோசனை நிலையமும்,
நிறுவனத்தினர் வழங்குகின்றனர்.

**முடிவு திகதி: 25-1-1984**

அனுப்பவேண்டிய முகவரி !
ஆசிரியர், வாரமலர்,
ஈழநாடு, யாழ்ப்பாணம்.

குறிப்பு! மேலுறையின் இடதுபக்க மேல்மூலையில் 'இடுகு வேலி வாசகர் போட்டி' எனக் குறிப்பிடவும்.

★ இப்போட்டியில் 'ஈழநாடு' ஊழியர்களோ அவர்களின் குடும்பத்தவர்களோ பங்குபற்றமுடியாது.



## சீட்டிழுப்பு முடிவு

வேலணை தெற்கு இலந்தைவனம் ஐயனார் ஆலய மணி நிதிக்காக பொங்கலன்று நடத்தப்பட்ட சீட்டிழுப்பில் வெற்றிபெற்ற இலக்கம்! 2091.

பரிபாலனசபை.

176



அகில இலங்கை விஸ்வகர்ம குல சங்கம்

## வருடாந்தப் பொதுக் கூட்டம்

காலம்: 18-1-84 புதன்கிழமை பி. ப. 3 மணி.

இடம் : 302, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள மேற்படி சங்கக் காரியாலயம்.

தலைவர் ; திரு. தா. க. பொன்னுத்துரை J.P. அவர்கள்

அத்தருணம் விஸ்வகர்ம குல மக்கள் யாபேரையும் வருகை தரும்படி அழைக்கின்றோம்.

தா. க. பொன்னுத்துரை J. P. தலைவர் [182] த. பரராசசிங்கம் செயலாளர்



## Diploma In Computer Programming

புதிய வகுப்பு 21-01-84 இல் ஆரம்பமாகிறது.

வெளிநாடு செல்பவர்களுக்கு நீங்கள் 18 கிழமைகளில் ஓர் கம்பியூட்டர் நிபுணர்களாவதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

(பயிற்சியில் சித்திபெறும் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.)

செயமுறை:
COMMODORE COMP 80, SINCLAIR ஆகிய கம்பியூட்டர்களில் முழுமையான பயிற்சியளிக்கப்படும். அத்துடன் GAMES GRAPH புரோகிரும் பண்ணும்முறையும் போதிக்கப்படும்.

# DIGITAL COMPUTER CONSULTANTS

Insurance Corporation க்கு முன்னால்)
615, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்

170

# இன்றைய பலன்

தை மாதம் 3ம் திகதி
செவ்வாய்க்கிழமை
(17-1-84)

மேடம்: பொருளாதாரத் துறையில் நல்ல முன்னேற்றம் கடன் தொல்லை நிவர்த்தியாகலாம் புத்திர வழியால் புகழுக்கும் இடமுண்டு பாவையர் அறிமுகம் உண்டு

இடபம்: வாழ்க்கை ஒரு புதிராகத் தோன்றும் கடன்தொல்லையும் செலவும் அதிகரிக்கும் பழைய நினைவொன்று பூகம்பத்தை உருவாக்கும்பொறுமை நன்று.

மிதுனம்: பேச்சுவார்த்தையில் உணர்ச்சிவசப்படாதிருக்கவும் துதிபாடிக்கொண்டே சிலர் துரோகச்செயலில் ஈடுபடுவர் அவசரப்போக்கை அடக்கின் நன்று.

கடகம்: முத்தான சந்திப்பும் முதியவரின் ஒத்துழைப்பும் குற்றத்தால் பயனும் கிட்டும் ஸ்திர வழியால் கனிவான பேச்சுக்கும் இடமுண்டு சுப தினம்.

சிங்கம்: தற்பெருமை தடுமாற்றத்தை உண்டாக்கும் கண்துடைப்பு வேலைகளுண்டு கவனிப்பு வேண்டும் சகோதர வழியாலும் பெரியோரையும் பகைத்துக்கொள்ள நேரிடலாம்.

கன்னி; அன்னையின் அன்பு தாராளமாகக்கிடைக்கும் செய்காரியங்களில் தனிப்புகழ் அடைவீர் வாகன சொந்தக்காரர்களுக்கு வரும்படி திருப்திகரமாக இருக்கும்.

துலாம்: புதுமையில் நாட்டம் பொன்முன வாழ்வும் புத்திரர் மகிழ்ச்சி உங்களைப்பூரிக்க வைக்கும் நற்செய்தியும் பொறுப்புகளும் கிட்டும் ஆனந்ததினம்.

விருச்சிகம்: அரசபயம் அந்தரப்பட வைக்கும் உங்கள் விடயத்தில் உண்மை உறங்கி விடும் சத்துருக்கள் கைவரிசை கணப்பொழுதில் இடம்பெறும் அமைதியே நன்று

தனுசு: தாம்பத்திய வாழ்வில் தனிச்சிறப்பு காணப்படும் புதுமையான எண்ணங்களால் உந்தப்படுவீர் தொழில் நிலையும் சிறப்புப்பெறும் களிப்பான தினம்.

மகரம்: ஏக்கத்தின் சாயல் தாக்கும் சிக்கலில் மாட்டிக் கொள்ள நேரிடலாம் விபத்துக்கள் உண்டு அவதானம் வேண்டும் பயணங்கள் தவிர்ப்பின் நன்று.

கும்பம்: வாகனசுகம் வரவில் திருப்தி கல்விச் சுகம் பெரியோர் புகழ்ச்சி பிதா வழித்தனம் பெருமையுடன் சேரும் பிரயாணத் திட்டங்களும் இடம்பெறும்.

மீனம்: குடும்ப மகிழ்ச்சி உயர்பீட ஆதரவு தொழில் முன்னேற்றம் வாகனசுகம் இருப்பிடமாற்றம் மனமகிழ்ச்சிக்கும் இடமுண்டு.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை
குவேந்திரன்

## அகதிகள் முகாம் திருமணம்

(துணுக்காய்)

யோகபுரம் அகதிகள் முகாமில் உள்ள ஒருஜோடிக்கு திருமணம் செய்ய முகாம் பொறுப்பாளர்கள் முடிவு செய்துள்ளனர். அதேநேரத்தில் குடியேற்றவாசி ஒருவரும் அகதிகள் முகாமில் ஒரு பெண்ணை தான் மணம் முடிக்க விருப்பம் தெரிவித்துள்ளாராம். இவர்களது திருமணம் இம்மாதம் நடைபெறவுள்ளதென அதன் நிர்வாகிகள் தெரிவித்தனர்.

முகாமிலுள்ள அத்தனை பேருக்கும் காணி தேவை என்பதால் நிர்வாகிகள் துணுக்காய் உதவி அரசாங்க அதிபரை கிராம சேவகர் மூலம் மூலம் தொடர்பு கொண்டு காணி பெறவேண்டுமென்றும் தெரிவித்துள்ளனர். இம்முகாமை திரு. எஸ். நவரத்தினம் மேற்பார்வை செய்துவருகிறார். (க)

## ஐந்து கட்சிகள் நடத்திய ஆலோசனை

(கொழும்பு)

உண்ணாவிரதம் இருந்து வரும் தமிழ் பல்கலைக் கழக மாணவர்கள் பற்றி 5 அரசியல் கட்சிகள் கொழும்பில் கூடி ஆலோசனை நடத்தியுள்ளன.

உண்ணாவிரதம் இருந்து வரும் மாணவி ஒருவரின் நிலைமை மோசமடைந்துள்ளதாக டாக்டர் ஏ. எஸ் தருமலிங்கம் நேற்று முன்தினம், தமிழ் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. குமார் பொன்னம்பலத்துக்கு தொலைபேசிமூலம் அறிவித்திருந்தார்

5 கட்சிகளின் கூட்டத்தில் திரு. குமார் பொன்னம்பலம் மேற்கண்ட தகவலை தெரிவித்தார். இதைத் தொடர்ந்து இக்கட்சிகள் பாதிக்கப்பட்ட தமிழ் மாணவர்கள் பற்றியும், உண்ணாவிரதம் இருந்துவரும் மாணவர்கள் நிலைமைபற்றியும் ஆராய்ந்தது.

இக்கூட்டத்தில் தமிழர் விடுதலை கூட்டணி, தமிழ் காங்கிரஸ், தமிழரசுக்கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, சமசமாஜ கட்சி ஆகியவை கலந்து கொண்டன.

இக்கட்சிகளின் கூட்டம், தினமும் கூடி நிலைமையை ஆராயும் எனத் தெரியவருகிறது. (க)

## ரூபவாஹினியில் இன்று

மாலை
6-00 ஏ பி ஸி உலக விளையாட்டுகள்
6-55 செய்திகள் (தமிழ்)
7-15 தென்னோலைக்கைப்பணி பற்றிய விவரணச் சித்திரம்
7-45 புரொஜெக்ட்-யு. எவ். ஓ (ஆங்கிலச் சித்திரம்)
8-15 செய்திகள் (சிங்களம்)
8-35 புரொஜெக்ட் தொடர்ச்சி
9-05 'பொலன்னறுவ' தகவல் நிகழ்ச்சி
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
9-50 'பொலன்னறுவ'-(தொடர்ச்சி)
10-30 உலகச் செய்தித் தலையங்கங்கள்
10-35 நிகழ்ச்சிகள் முடிவு.

## சமநீதி இயக்கம் ஜனாதிபதிக்குத் தந்தி

(யாழ்ப்பாணம்)

'இடம் பெயர்ந்த பல்கலைக் கழகத் தமிழ் மாணவர்களின் கோரிக்கையை நிறைவேற்றி, சாகும்வரை உண்ணாவிரதமிருக்கும் மாணவர்களின் உயிரைக் காப்பாற்றுங்கள்' என்னும் தந்திச் செய்தியை சமநீதி இயக்கத்தின் பிரதம அமைப்பாளர் திரு. பி. கே. பாலசுப்பிரமணியம் ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ளார்.

இத்தந்திச் செய்தியின் பிரதிகள் இந்தியப் பிரதமரின் விசேட தூதுவர் திரு ஜி. பார்த்தசாரதி, எதிர்க்கட்சித் தலைவர் திரு. அனுராபண்டாரநாயக்கா, பல்கலைக்கழக மான்யக்குழுத் தலைவர் பேராசிரியர் ஸ்டான்லி கல்பகே ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (மா)

## கொள்ளைச் சம்பவங்கள்:

# சந்தேக நபர்களை அடையாளம் காட்டினர்

(மாவிட்டபுரம்)

அராலி வட்டுக்கோட்டை பகுதிகளில் இடம் பெற்ற கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக இரு சந்தேக நபர்கள் அடையாள அணிவகுப்புக்குட்படுத்தப்பட்ட சமயம் சாட்சிகளில் சிலர் இவர்களை அடையாளம் காட்டினார்கள்.

அராலியில் இடம்பெற்ற இரு கொள்ளைகள் தொடர்பாகவும் வட்டுக்கோட்டையில் இடம் பெற்ற ஓர் கொள்ளைச் தொடர்பாகவும் இந்த அடையாள அணிவகுப்பு இடம்பெற்றது. சந்தேக நபர்களான மாரியன் தங்கராசா, மாணிக்கம் இராஜரத்தினம் ஆகியோர் இந்த அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப் பட்டிருந்தனர்.

மல்லாகம் பதில் நீதிபதி திரு. கே. குணரத்தினம் அடையாள அணிவகுப்பை நடத்தினார்.

அராலியில் இரு ஐயர் வீடுகளில் இடம் பெற்ற கொள்ளைகள் தொடர்பாகவும் வட்டுக்கோட்டையிலுள்ள வீடொன்றில் நடைபெற்ற கொள்ளை தொடர்பாகவும் சாட்சிகள் அழைக்கப்பட்ட போது சில சாட்சிகள் சந்தேக நபர்களை அடையாளம் காட்டினர்.

இதையடுத்து சந்தேக நபர்களைத் தொடர்ந்தும் றிமாண்டில் வைக்கும்படி நீதிபதி திரு. சி. வி. விக்னேஸ்வரன் உத்தரவிட்டார். — —

## மிளகாய்ச்செடி அடிக்கட்டை யமனாகமாறியது!

(யாழ்ப்பாணம்)

மிளகாய்ச் செடியின் அடிக்கட்டை பாதத்தில் ஏறிய கிராமசேவையாளர் ஒருவர் ஏற்புவலியால் மரணமானார்.

கைதடிதெற்கு கிராமசேவையாளர் குருநாதர் சின்னத்துரை (50வயது) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

இவர் மரணமாவதற்கு 12 நாட்களுக்கு முன்னர் வாழைக்குலை பழுக்கப் போடுவதற்கு தமது தோட்டத்தில் கிடங்கு வெட்டிக் கொண்டிருந்ததாகவும் அப்பொழுது மிளகாய்ச் செடிக்கட்டை வலதுபாதத்தில் குத்தியதால் மருந்துகட்டி வந்ததாகவும் கடந்த 10 திகதி அவரின் வாய்கிட்டியதைத் தொடர்ந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்னர் இறந்துவிட்டதாகவும் மரணவிசாரணையில் தெரியவந்தது

மரணவிசாரணை அதிகாரி திரு. கனகரத்தினம் கேசவன் விசாரணைசெய்தபின்னர் ஏற்புவலியால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்தார். யாழ். பொலிஸ் நிலைய கான்ஸ்டபிள் சே. லோகநாதன் சாட்சிகளை ஆஜர் செய்தார். இறந்தவரின் மனைவி பூமணி சின்னத்துரை, புவனேஸ்வரன் ஆகியோர் சாட்சியமளித்தனர். (மா)

## இடமாற்றம்

(கல்வியங்காடு)

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பிரதம விரிவுரையாளராகக் கடமை புரிந்த திரு. திரு. வி. பாலசிங்கம் அனுராதபுரம் கல்வித் திணைக்களத்துக்கு இடமாற்றம் செய்யப் பட்டுள்ளார்.

## கம்பிகள் திருட்டு

(துணுக்காய்)

வவனிக்குளம் நீர்ப்பாசன இலாகாவின் கிளைவாடியான யோகபுரம் 4-ம் யூனிற்றில் சுமார் 15 கம்பிகள் திருடப் பட்டுள்ளன.

மறுநாள் நீர்ப்பாசன இலாகாவினர் நேரடியாக பார்வையிட்டனர். இதுவரை கம்பிகள் எப்பகுதியிலும் தேடியும் காணவில்லை எனக் கூறப்படுகிறது. (க)

## வாழ்க்கைப்படி

(கல்வியங்காடு)

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க ஊழியர்கள் இனி வரும் தற்போது பெற்றுவரும் மொத்தச் சம்பளத்துடன் சேர்த்து மேலதிகமாக 100 ரூபாவினை வாழ்க்கைச் செலவுப்படியாகப் பெற்றுள்ளனர்.

இச்சங்கம் நல்லமுறையில் இயங்குவதால் கூட்டுறவு ஆணைக்குழு இம்மேலதிகப்படியினை வழங்க அனுமதிகொடுத்துள்ளது.

இப்படியை 1983-ம் ஆண்டு அக்டோபர் மாதத்திலிருந்து நிலுவையுடன் வழங்க இருப்பதாகச் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

## இடமாற்றம்

(மன்னார்)

மன்னார் ஆரம்ப நீதிமன்ற நீதவானாகக் கடமையாற்றிய ஜனாப் ஏ. எல். எம் மீருன் சாகிபு இம்மாதம் முதல் மட்டக்களப்பு ஆரம்ப நீதிமன்ற நீதவானாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவரது இடத்திற்கு மட்டக்களப்பு ஆரம்ப நீதிமன்ற நீதவானாகக் கடமையாற்றிய திரு. சிங்கராயர் ஜேசுதாசன் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (சூ)

## இளைஞர்களுக்கு புத்திமதி

(மன்னார்)

"இளைஞர்கள் தமது நேரத்தையும், சக்தியையும் வீண் விரயம் செய்யக்கூடாது. இளைஞர்கள் தமது உழைப்பையும் சக்தியையும் நல்லமுறையில் செலவிடவேண்டும் என்பதற்காகவே தேசியஇளைஞர்சேவை மன்றத்திட்டம் உருவாக்கப் பட்டது".

இவ்வாறு எருக்கலம்பிட்டி இளம் பிறை இளைஞர் சேவை மன்றத்தினரால் நடத்தப் பட்ட கரப்பந்தாட்டச்சுற்றுப் போட்டியில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் மன்னார் மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி ஜனாப் ஏ.சி. ஏ. கபூர் தெரிவித்தார்.


யாழ். மக்களுக்கோர் மகிழ்ச்சியான செய்தி

நீங்கள் வெளிநாடு செல்லவேண்டுமா?
உங்கள் பிரயாணச்சீட்டுக்களை இன்றே யாழ்நகரிலேயே பதிவு செய்துகொள்ள
நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்

குரேஸ் ட்ரவல் சேர்விசஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

அமெரிக்கா [America] செல்வதற்கான விசா, பயணச் சீட்டுக்கள் ஆகிய சகல ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்படும். உடனே தொடர்பு கொள்ளுங்கள்.

CROSS TRAVEL
SERVICES
(PTE) LTD.
STAGE II MODEL MARKET,
No. 5, 1st FLOOR,
BUS STAND CENTRE ROAD,
JAFFNA.
Phone No. 22065, 22040

★ பேளின் (BERLIN) ரூபா 9500/- ஒருவழி பயணச் சீட்டு



BASIC ENGLISH

எமது அடுத்த ஆங்கில வகுப்பு
25-01-84ல் ஆரம்பமாகின்றது

விரிவுரையாளர்: கொழும்பு - யாழ்நகர்
பிரபல ஆங்கில ஆசான்

கந்தையா நவரேந்திரன்

முழுக்கட்டணம்: ரூபா 100/- மட்டுமே

★ அச்சடித்த பாடக்குறிப்புகளும் பயிற்சிகளும் இலவசமாக வழங்கப்படும்.
★ வெளிநாடு செல்பவர்களுக்கும் வேலைவாய்ப்புக்களை எதிர்பார்த்திருப்பவர்களுக்கும் உயர் கல்வியைத் தொடர்பவர்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்.

CANTABIA
INSTITUTE
21, MAIN STREET, JAFFNA.
Phone: 24201

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 2-30, 6-00
சிவாஜி — வாணிஸ்ரீ
வசந்த மாளிகை

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30
6-00,
கமல்-ஸ்ரீதேவி
சில்க் சுமிதா
மூன்றாம் பிறை
(வெள்ளிவிழா சித்திரம்)

வின்ஸர் [யாழ். நகர்]
தினசரி 4 காட்சிகள்
2வது வெற்றி மாதமாதம்!
சிவகுமார் - ராதா
சிவச்சந்திரன் - அருணா
நடித்த
ஆனந்தராகம்
கடற்கரைக் கிராமத்தில் சிட்டாகப் பறந்து வானம்பாடியாய் - ஆனந்த ராகமாய் சுருதியை மீட்டிவரும் காதல் ஜோடிகளின் கண் கவர் வண்ண ஓவியம். ஈழத்திரை வானிலே இசையின் தேன் வெள்ளமாய் பெருக்கெடுத்து அநேகரின் இதயத்தைக் கவர்ந்த இசை ஓவியம்.

லிடோ [யாழ்நகர்]
தினசரி 3 காட்சிகள்
WHO FINDS A FRIEND FINDS A TREASURE
(Scope Color)

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00, 9-00
முத்துராமன் - கவிதா
தேங்காய்சீனிவாசன்
காற்றினிலே வரும் கீதம்

ராஜா (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
9-00



சிவாஜி - சௌகார்
பாபு (புதிய பிரதி)

3-வது "பெண்திரள்" வாரம்
றீகல் (யாழ்.நகர்)
தினசரி: 10-30, 2-30, 6-15,
9-00



மோகன்... பூர்ணிமா
ஜெயராம்...
பயணங்கள் முடிவதில்லை
(ஈஸ்மென் கலர்)


## பாலஸ்தாபனம்

(யாழ்ப்பாணம்)
வடகோவை ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோவில் பாலஸ்தாபனம் நாளை புதன் அதிகாலை நடைபெறவுள்ளது.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

### மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வட்டுக் கோட்டை என்னுமிடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற கதிரவேலு காசிநாதன் என்பவரின் மரணசாதன மற்ற மரணச் சொத்துக்களின் விடயத்தில்
மரணமெய்தியவர்
மரணசாதன )
நியாயாதிக்கம்) இல. ரி/178
காசிநாதன் மகள் கமலா தேவி, சங்குவேலி.
மனுதார்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட மரணமெய்தியவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளைபதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப் படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1984ம் ஆண்டு தை மாதம் 25ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுன கட்டளையாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1983ம் ஆண்டு மார்கழி மாதம் 22ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி,
ஆழ்வார்
சிவபாதசுந்தரம்,
பதிவாளர்.

தயாரித்தவர்:
க. குணரத்தினம்,
மனுதாரின் சட்டத்தரணி.
10979


ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-சாவித்திரி-பத்மினி
சரஸ்வதி சபதம்
(புதியபிரதி) ஈஸ்மன் கலர்)

மனோகரா (யாழ். நகர்)
Daily 10-30 a.m. 2-15, 4-45, 7-00 p. m. only
Clint East wood
in
EVERY WHICH WAY BUT LOOSE
(Action - packed) Color)

ராணி (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி-சௌகார் ஜானகி
பட்டாக்கத்தி பைரவன்
அடுத்த வெளியீடு
செந்தாமரை

சாந்தி
13 — 17
10-30, 2-30, 4-45, 7-00
He wanted Adventure...
She Craved for Revenge...
Emeralds Hold the Answer
OMAR SHARIF
RYAN ONEAL
GREEN ICE
Dont Miss this Action Suspense Thriller Movie




அரை நூற்றாண்டு காலத்துக்கு மேலாகத் திருநெல்வேலியில் வாழ்வாங்கு வாழ்ந்து, சோதிஅக்கா என்றும் தையலக்கா என்றும் அன்பு கனிய அழைக்கப்பட்ட 'சோதி' மறைந்து இன்றுடன் ஒரு மாதம் ஆகிறது. திருநெல்வேலியிலும் சூழவுள்ள கிராமங்களிலும் சோதி அக்காவாகத் திகழ்ந்த திருமதி நாகலிங்கம் பரஞ்சோதி, அடுத்த தலைமுறையினர்க்கு "அம்மா".

பிறந்தகம் நவாலி. ஆரம்பக் கல்வி உடுவில் மகளிர் கல்லூரியில், உயர் வகுப்புக் கல்வி வேம்படி மகளிர் கல்லூரியில். நாகலிங்கம் என்ற நல்மகனை மணமுடித்துப் புகுந்தகம் திருநெல்வேலி. இன்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழகமாகத் திகழ்வது அன்று பரமேஸ்வரக் கல்லூரி. அக் கல்லூரியில் முதன்முதல் ஆசிரியத் தொழில்பெற்ற பெண் 'சோதி அக்கா'.

பசிப்பிணி போக்கியும், மழை—வெள்ளத்தால் பாதிப்புற்றோரைத் தேடிச்சென்று உதவிகள்புரிந்தவர். அன்னாரது பிரிவால் துயருறும் உற்றார் உறவினர்க்கு எமது அனுதாபங்களைக் கூறி, மனிதப் பண்பாடுகளின் உறைவிடமாய் விளங்கிய சோதிஅக்காவின் பிரிவையொட்டி அன்னாருக்கு எமது அஞ்சலிகள்.

சு. இராஜநாயகம்

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



### சிவானந்தன் சுரேஸ்குமார்

மலர்வு:- 3-6-1968 உதிர்வு:- 18-12-1983

இறைவனடியைச் சேர்ந்த எமது மகனின் அந்தியேட்டிக் கிரியைகள் 17-01-1984 செவ்வாய்க்கிழமை (இன்று) எமது இல்லத்தில் நடைபெறும். இக்கிரியைகளில் பங்கு கொண்டு எமது மகனின் ஆத்ம சாந்திக்காக இறைவனை இறைஞ்சும்படி உற்றார், உறவினர், சுற்றத்தவர், சுரேஸ்குமாரின் ஆசிரியர்கள், மாணவ நண்பர்கள் அனைவரையும் வேண்டுகிறோம்.

இறுதிச் சடங்கில் கலந்து எமது துக்கத்தில் பங்கு கொண்டோர்க்கும். அனுதாபச் செய்திகள் அனுப்பியோர்க்கும், வைத்தியசாலையில் ஆதரவு நல்கி அவரின் உயிருக்காகப் போராடிய அனைவர்க்கும், கல்வி புகட்டி உதவிய ஆசிரியர்களுக்கும், துயர நிகழ்ச்சியில் பங்கு கொண்ட சக மாணவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

திரு. திருமதி சிவானந்தன்,
சகோதரர்கள், உறவினர்.

566/4, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

150

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

# கேள்வி அறிவித்தல்

இதன்கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள ஆட்டிறைச்சிக்கடை, சந்தைக்கடைகள் ஆகியவற்றை அட்டவணையில் குறிப்பிடப்பட்ட காலங்களுக்கு 01-02-84-ம் திகதிமுதல் குத்தகைக்குக் கொடுப்பதற்கான கேள்விகள் யாழ்ப்பாண மாநகராட்சிமன்ற ஆணையாளரால் 27-1-84-ம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விகள் மாநகராட்சி மன்றத்தினால் 26-1-84-ம் திகதி வியாழக்கிழமை மாலை 2-30 மணிவரை வழங்கப்படும் இணைப்படிவங்களில் சமர்ப்பிக்கப்படல்வேண்டும். கேள்விப் படிவங்களைப் பெறுவதற்கு அடையாள அட்டை அல்லது கிராம சேவையாளர் வதிவிடச் சான்றிதழைச் சமர்ப்பித்துக் குறித்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிணைப் பணமும், கேள்விப்படிவக் கட்டணம் ரூ 50/-ம் செலுத்தல்வேண்டும். கேள்விப்படிவங்களை உள்ளடக்கும் உறை அரக்குமுத்திரையிடப்பட்டு, உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்விக்கான பெயர் குறிப்பிடப்பட்டு, யாழ் மாநகர ஆணையாளருக்கு விலாசமிடப்பட்டு, யாழ்ப்பாண மாநகராட்சிமன்றத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல்வேண்டும். அல்லது பதிவுத்தபால் மூலம் யாழ். மாநகர ஆணையாளருக்கு 27-1-84-ம் திகதி நண்பகல் 12-00 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல்வேண்டும்.

இக்கேள்வி சம்பந்தமான இதர விபரங்களை மாநகராட்சிமன்ற அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

சி. வீ. கே. சிவஞானம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம், 12-1-84

### அட்டவணை

| குத்தகை விபரம் | குத்தகைக் காலம் | கேள்விப் பிணை | நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|
| 1. குருநகர் சந்தை மேல்மாடி உள்புறக்கடை பிரிவு 'எ' கடைகள் | 5 வருடம் | 1500/. | 12000/- |
| 2. முற்றவெளி ஆட்டிறைச்சிக் கடை இல. 5 | 23 மாதங்கள் | 2500/- | 15750/- |
| 3. முற்றவெளி மாநகர சபை அலுவலகமாகப் பாவிக்கப்பட்ட அறை | 5 வருடம் | 1500/- | 9000/- |

141

# பொதுமக்கள் பேராதரவு....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தூர இடங்களிலிருந்தும், உண்ணாவிரதம் இருக்கும் மாணவர்களைப்பார்வையிட பெருந்திரளானோர் தினமும்வந்துகொண்டிருந்தனர்

## ஒருமாணவர் மட்டுமே ஒரு தடவை எழுந்திருந்தார்

பார்வையாளர் எவரும் உண்ணாவிரதம் இருக்கும் மாணவர் பகுதிக்கு செல்ல அனுமதிக்கப்படவில்லை. கிடுகினால் வேயப்பட்ட ஒரு கொட்டிலில் அமைக்கப்பட்ட 5 அடி மேடையில் முதல் 5 மாணவர்களும், அவர்களைத்தொடர்ந்து 4 மாணவிகளும் படுத்திருக்கின்றனர். பார்வையாளர் பக்கமாக தலைகளைவைத்து படுத்திருந்தனர், அருகில் சலகமாணவரும் உறவினரும் நின்று தேவையான உதவியை செய்துகொண்டிருந்தனர். முதல் மாணவன் மட்டும் இரண்டொருதடவை எழுந்திருந்து அருகில் நின்ற உதவியாளரிடம், மெதுவாகபேசினார். மற்ற 8 பேரும் காலை முதல் இரவுவரைபடுத்துக்கொண்டே இருந்தனர்.

கொடும்பனியையும் கடும் குளிரையும் பொருட்படுத்தாது தங்களையே வருத்திக்கொண்டு, படுத்திருந்த காட்சியைப் பார்த்து பலர் கண்ணீர் விட்டனர்.

சிலர் போர்வையால் போர்த்திக்கொண்டிருந்தனர் சிலர் 'சுவட்டர்' அணிந்திருந்தனர். நெற்றியில் வீபூதி காணப்பட்டது

அந்தக்கொட்டிலுக்கு முன் பகுதியில் ஒரு தகரப்பந்தல் அந்தப்பந்தலுக்குள் மாணவிகளும் தாய்மார்களும் குழந்தைகளும் அமர்ந்திருந்தனர் பல்கலைக்கழகவளவு எங்கும் மாணவர்கள் பொதுமக்கள் காணப்பட்டனர்.

காலையில், மாணவர் குழுவினர் கூடிநிலைமையை ஆராய்ந்தபின்னர் ''நிலைமை மோசமடைகிறது'' என அவசர தந்தியொன்றை அமைச்சர் எஸ். தொண்டமானுக்கும் இந்தியத்தூதரருக்கும்அனுப்பி வைத்தனர்.

## 2 ஆயிரம் சைக்கிள்கள்

நண்பகலுக்கு பின் பார்வையாளர் கூட்டம் அதிகரித்ததை தொடர்ந்து சயிக்கில் நிறுத்துமிடம் வேறுமைதானத்திற்கு மாற்றப்பட்டது அங்கு இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட சயிக்கிள்கள் நிறுத்தப்பட்டிருந்தனர். பார்வையாளர் நீண்ட 'கியூ'வில் நின்றே உண்ணாவிரதம் இருக்கும் மாணவர்களை பார்வையிட்டனர் தடைவேலிக்குள் எவரும் செல்ல அனுமதிக்கப்படவில்லை. பல்கலைக்கழக மாணவரின்பெற்றோர்மட்டுமே அருகில் இருந்து உதவிகளைச் செய்துகொண்டனர். சைவக்குருமார்கள் சென்று ஆசீர்வதித்து அவர்களுக்கு விபூதியிட்டு பிரார்த்தித்தார்கள்.

## நிதிசேகரிப்பு

பல்கலைக்கழக வாசலில் மாணவர்கள் உண்டியல் வைத்து நிதிசேகரித்துக்கொண்டிருந்தனர் 'பாதிக்கப்பட்ட மாணவர் விவகாரம் பற்றிய நூல்களும் விற்பனையாகிக்கொண்டிருந்தது.

## திடீர் கூட்டம்

பல்கலைக்கழக வளவிற்குள் திரண்டுநின்ற சுமார் மூவாயிரம் மக்கள் மத்தியில் மாணவர்கள், ஒரு திடீர்ப்பொதுக்கூட்டத்தை நடத்தினார்கள். 'சிறிய ஒலிபெருக்கியைகையில் பிடித்துக்கொண்டு மைதானத்திலுள்ள மேடையொன்றில் ஏறி மாணவத்தலைவர்கள் உரையாற்றினார்கள்.மாணவர் தலைவர் ஒருவர் பேசுகையில்: ''ஒன்பதுபேரும்உடலைவருத்தி உயிரைப்போக்கிக்கொண்டிருப்பது எதிர்கால தமிழ் மாணவர்களுக்காகவே.

ஈழத்தில் அமையப்போகும் முழுமையான பல்கலைக்கழகத்திற்கு இந்த ஒன்பதுபேரின் தியாகமும் அத்திவாரமாக அமையப்போகிறதென்றும் இந்தமாணவர்போராட்டத்தை கிராமம் கிராமமாக மக்கள் போராட்டமாக மாற்றவேண்டுமென்றும் கூறினர்.

அரசின் கவனத்தை ஈர்க்கக்கூடியவிதத்தில் ஒவ்வொருவரும் இந்த போராட்டத்தில் தங்களால் முடிந்ததைச்செய்ய வேண்டும் என்றும் எதிர்காலத்தில் எந்தஒரு தமிழ் மாணவனும் தென்னிலங்கைக்குசெல்ல கூடாது என்றும் கூறினர்.

மற்றொரு மாணவர் தலைவர் பேசுகையில் மாணவரில் ஒருவராவது மடிய நேரிட்டால் அதன்பின் இங்கு எல்லாமே செயலிழந்துவிடுமென்றும் அதன் பின்னரே அரசு மாணவரின் சக்தியை அறிந்துகொள்ளும் என்றும் தெரிவித்தார்.

(க-கு)

---

## யாழ். நகரில் நடந்த---

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

டிருந்தனர்.

### மாணவரின் சைக்கில் ஊர்வலம்

யாழ்ப்பாண கல்லூரிகளைச் சேர்ந்த உயர்வகுப்பு மாணவர்கள், சீருடையுடன், கறுப்புப்பட்டி அணிந்து பலத்த மழை பெய்து கொண்டிருந்த போது பிரதானவீதி வழியாக சைக்கிள் ஊர்வலம் ஒன்றை நேற்று நண்பகல் நடத்தினார்கள்.

### வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்னால்

யாழ். வீரசிங்கம் மண்டபத்திற்கு முன்னால் நேற்று நண்பகல் தனியார் 'மினிபஸ்கள்' ஊர்வலமாக வந்து, உண்ணாவிரதத்திற்கு ஆதரவாக 3 நிமிடங்கள் ஹோன் அடித்தார்கள்.

அரசாங்க தனியார்துறை ஊழியர்கள் சுலோக அட்டைகளை தாங்கி பண்ணைவீதிவழியாக பண்ணைச்சந்தைவரை நேற்று நீண்ட ஊர்வலமொன்றை நடத்தினார்கள் கல்விக்கந்தோருக்கு முன்னாலும், தொழிற்சங்கங்களும், மாணவர்களும் சேர்ந்துநேற்று நண்பகல் ஒருமணிநேரம் ஆர்ப்பாட்டம் செய்தார்கள் இதில் ஆசிரியர்களும் கலந்துகொண்டனர்.

### மாநகரசபை ஊழியர்கள்

யாழ். மாநகரசபை ஊழியர்கள், வீதிஓரத்தில் சுலோக அட்டைகளுடன் நின்று ஆர்ப்பாட்டம் செய்தார்கள். சகல ஊழியர்களும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டார்கள். யாழ். பெரியஆஸ்பத்திரிக்கு முன்னாலும், நண்பகல் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடைபெற்றது. பெருந்திரளான மக்கள் இதனைப்பார்வையிட்டனர்.

கச்சேரி சந்தியில் நேற்று திரண்டிருந்த ஊழியர் மத்தியில் பாதிக்கப்பட்ட மாணவர் உரையாற்றினார்கள்.

### நகரெங்கும் கறுப்புக்கொடி

யாழ். நகரில் சகலகடைகளிலும் வர்த்தக நிலையங்களில் நேற்று கறுப்புக்கொடி தொங்கவிடப்பட்டிருந்தன. சகல வாகனங்களிலும் கறுப்புக்கொடிகள் காணப்பட்டன. சந்திக்குச் சந்தி கறுப்புக்கொடி தொங்கவிடப்பட்டிருந்தன. மாணவர்கள், கறுப்புபட்டிகள் வழங்கிக்கொண்டிருந்தனர்.

யாழ் மாநகரசபைக்கு முன்னால் நடந்த ஆர்ப்பாட்டத்தில் ஜனாப் எம். ஏ. ஸி. இக்பால் தலைமையில் இலங்கை தொழிற்சங்க சம்மேளன உறுப்பினர்கள் கலந்துகொண்டனர் அரசாங்க தமிழ் லிகிதர் சேவை சங்க உறுப்பினர்களும் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றினார்கள்.

நேற்று நடந்த ஆர்ப்பாட்டங்களில் 19 தொழிற்சங்கங்கள் பங்குபற்றின. இந்த ஆர்ப்பாட்டம், தினமும் நண்பகல் ஒருமணி நேரம் நடைபெறும் என்றும், மாணவர்கள் தெரிவித்தனர்.

(க)

---

## மாணவி நிலைமை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றும் எழுதியிருந்தார்

இதைத் தொடர்ந்து ஜனாதிபதி மாளிகையில் நாளை நண்பகல் 12 மணிக்கு மாணவர் பிரதிநிதிகள் மூவரையும் யாழ் பிரஜைகள் குழு உறுப்பினர் ஒருவரையும் சந்திப்பதற்கு ஜனாதிபதி சம்மதித்துள்ளார் என்ற தகவல் கலாநிதி நீலன் திருச்செல்வம் மூலம் அறிவிக்கப்பட்டதுடன் ஜனாதிபதியை சந்திக்கவிருக்கும் மாணவர் பிரதிநிதிகளின் பெயர்களை உடனடியாக அனுப்புமாறும் தெரிவிக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்தே யாழ். பிரஜைகள் குழுத்தலைவரும், செயலாளரும், யாழ். பிஷப். தியோகுப்பிள்ளையும் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை சென்று மாணவர் தலைவரை சந்தித்து 2 மணிநேரம் பேச்சு நடத்தினார்கள்,

இதுபற்றி மாணவர்குழு கூடி ஆராய்ந்து முடிவு தெரிவிப்பதாக மாணவர் தலைவர் திரு. ரி. தயாபரன் அவர்களிடம் தெரிவித்திருந்தார். ஆனாலும் நேற்று திங்கட்கிழமை மாலை 6 மணிவரை மாணவர்களிடமிருந்து எவ்வித முடிவும் கிடைக்கவில்லை என்று யாழ். பிரஜைகள் குழுச்செயலாளர் திரு, ஆர். பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

இதுதொடர்பாக நேற்று மாலை மாணவர் தலைவர் திரு. ரி, தயாபரனுடன் தொடர்பு கொண்டபோது கூட்டணித் தலைவர்கள் திரு. அ. அமிர்தலிங்கமும், திரு. மு. சிவசிதம்பரமும் தங்கள் பிரச்னைபற்றி நேற்றுமாலை ஜனாதிபதியுடன் நேரில் சந்தித்து பேசுவதாக உறுதியளித்ததாகவும். கூட்டணித்தலைவர்கள் - ஜனாதிபதி சந்திப்பின் முடிவுதெரிந்த பின்னரே, யாழ். பிரஜைகள் குழு விடுத்தவேண்டுகோள் பற்றி கூடி முடிவு எடுப்போம் என்று தெரிவித்தார்.

### ஒருவர் நிலைமை மோசம்

இதே நேரத்தில் ஜனாதிபதிக்கு யாழ். பிரஜைகள்குழு நேற்றுமாலை அனுப்பிவைத்த அவசரத்தந்தியில்; உண்ணாவிரதமிருக்கும் ஒன்பதுபேரில் ஒருவரின் (மாணவியின்) நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகவும், உடனடியாக இதில்தலையிட்டு நடவடிக்கை எடுக்குமாறும் கோரியுள்ளது.

இடம்பெயர்ந்த தமிழ்மாணவர்கள் விஷயத்தில் நியாயமான தீர்வுகாணப்படும் என்று ஜனாதிபதி உடனடியாக உறுதியளிக்கும் பட்சத்தில் நிலைமையை சீராக்கமுடியும் என்று அந்தத்தந்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## உண்ணாவிரத---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விக்கப்பட்டது.

கடத்திச்செல்லப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களும்மாணவிகளும்எங்குகொண்டுசெல்லப்பட்டனர் என்பது இச்செய்தி அச்சுக்குப்போகும்வரைதெரியவில்லை இச்சம்பவத்தைத் தொடர்ந்து பல்கலைக்கழகத்தில் உண்ணாவிரதமிருந்த இடத்தில் நேறறிரவு மாணவர்கள் எவரும் காணப்படவில்லை.

---

## சர்வகட்சி---

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஆராய்வதற்காக ஏற்கனவே நிகழ்ச்சிநிரல் தயாரிக்கப்பட்டுவிட்டதால் இன்றைய மாநாட்டில் சில முக்கியமான விடயங்கள் குறித்து ஆராயப்படலாம் என நம்பப்படுகிறது.

(கு)

---

## 3 ஜீப் வண்டி---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காவலாளிகளையும் பயமுறுத்தி திணைக்களத்துக்கு முன்னால் நிற்கும் வேப்பமரத்தடிக்குக் கொண்டு சென்று காவல் வைத்துவிட்டு முன் கதவு திறப்பினை வாங்கி திறந்தனர். இச்சமயம் வேறு சில நபர்களும் உள்ளே வந்தனர். இதன் பின்பு கல்வி அதிபதியின் காரியாலய அறைக்கதவுக்கு குண்டு வைத்தனர். குண்டு சிலநிமிட நேரங்களின் பின்பு வெடித்தது. இதனால் அதிபதியின் அறைக்கதவு உடைந்து சிதறியதுடன் பக்கத்துச்சுவர் உடைந்து சிதறி, மேற் கூரை ஓடுகளும் பறந்தன. இதன் பின்பு மேற்படி நபர்கள் சைக்கிளில் தப்பி ஓடிவிட்டனர். காவலாளிகள் இருவரும் பக்கத்து வீட்டு ரெலிபோன் மூலம் பொலிசாருக்கு தெரிவித்தனர். காலையில் பொலிசார் திணைக்களத்துக்கு வந்து விசாரணை நடாத்தினர். (கு)

---


# மரண அறிவித்தல்

## A. J. மயில்வாகனம்

அல்வாயைச்சேர்ந்த அம்பலவாணர் ஜோசேப் மயில்வாகனம் (இளைப்பாறிய தலைமையாசிரியர்) காலமாகிவிட்டார். இவர் இராசம்மாவின் அன்புக்கணவரும், இராஜரத்தினம் (சிங்கப்பூர்) இராசமணி, பரமானந்தம், (புறாணை), டாக்டர் சதானந்தன் (வஹாக்கோட்டே), கருணாநந்தன் (புறாணை). இராஜேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத்தந்தையும் இராஜேஸ், தேவராஜா, கிருபா, தேவி, ஜெயா, அரசநாயகி, ஆகியோரின் அன்பு மாமனாருமாவார். அன்னாரின் பூதவுடல் நாளை (18-1-84) புதன்கிழமை காலை 8 00 மணிக்கு அல்வாய் தெற்கு, அல்வாயிலுள்ள அன்னாரது இல்லத்திலிருந்து சமக்கிரியைக்காக பருத்தித்துறை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். 188

# மரண அறிவித்தல்

## திரு. P. M. S. இராஜசிங்கம்

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திரு. P. M. S. இராஜசிங்கம் (பொறியியலாளர்) ஓமானில் அகால மரணமானார். இவர்காலஞ்சென்ற முதலியார் P. M. சங்கரப்பிள்ளை தம்பதிகளின் மூத்தபுதல்வரும், புவனேஸ்வரியின் அன்புக்கணவரும், மீனலோஜினியின் அன்புத்தந்தையும், காலஞ்சென்ற கல்லடி மணியத்தின் மருமகனும், பூபாலசிங்கம் (முன்னாள் யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினர்) தர்மகுலசிங்கம் (கணக்காளர் நைஜீரியா), சற்குணலிங்கம் (பொறியியலாளர் பாறேயின்), பாலமுத்துசிங்கம் (பொறியியலாளர் புறாணை), திருமதி செல்வராணி தெய்வேந்திரராசா, திருமதி சிவநேசமலர் நல்லைநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். 169

# மரண அறிவித்தல்

## கதிர்காமர் சண்முகம்

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், யாழ் ஆறுகால் மடம் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகக்கொண்டவரும், உள்நாட்டு இறைவரித்திணைக்கள உத்தியோகத்தர் திரு. திருச்செல்வம், யாழ். ஸ்ரீ லங்கா அச்சக உரிமையாளர் திரு சிவகுமன், பொன்னம்மா, கனகேஸ்வரி ஆகியோரின் தந்தையும், திரு. கந்தசாமி, பாக்கியலக்ஷ்மி சரஸ்வதி ஆகியோரின் மாமனருமாகிய கதிர்காமர் சண்முகம் காலமாகிவிட்டார். அன்னாரின் பூதவுடல் 17-1-84 பகல் 2மணிக்கு தகனக்கிரிகைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர் தயவுசெய்து ஏற்றுக் கொள்ளவும் 184

# மரண அறிவித்தல்

## திருமதி அரியமலர் நதானியேல்

அரியமலர் நதானியேல் காலமானார். இவர் இளைப்பாறிய தபால் அதிபர் திரு. R S. நதானியேலின் அருமைமனைவியும் அரியரத்தினம் உள்நாட்டு இறைவரி) ரஞ்சிதராணி, செல்வராணி ஆகியோரின் அன்புத் தாயாரும் ரஞ்சினி, நவரட்ணசிங்கம், அருட்திரு ஜெயசந்திரன் ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

பூதவுடல் யாழ்ப்பாணம் 874 ஆஸ்பத்திரி வீதியிலுள்ள இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக கொட்டடி சேமக்காலைக்கு நாளை புதன்கிழமை 18-1-84 காலை 9-30 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். 194


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதி மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1984-ம் ஆண்டு ஜனவரி மாதம் 17-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu- P. O. Box: 49, Telephone: 22389 — 24126.